
www.padippakam.com

# கதிரவன்

சித்திரை 1989.

நார்மோர தமிழர் சங்கம் வழங்கும் முதலாவது இதழ்
மலராசிரியர்: எஸ். ஜெகதீசன்
உதவி ஆசிரியர்கள்: பொ. சுந்தரலிங்கம்; கு. சந்திரசேகரன்.



நாடென்ன செய்தது உனக்கு என்று கேள்விகள் கேட்பதை விடுத்து
நீ என்ன செய்தாய் அதற்கு என்று கேட்டால் நன்மை உனக்கு.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

உ. /



# எமது இனிய
# தமிழ்
# புத்தாண்டு
# வாழ்த்துக்கள்

வாழ்க வளமுடன்....

நூர்மோர
தமிழர் சங்கம்

படிப்பகம்

www.padippakam.com



# "அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பினோர் வெள்ளம்" -பாரதி.

எமது நிர்வாகிகள்:-

போஷகர்கள்: திரு. வீ. யோகநாதன்.
திருமதி. யோகாம்பிகை.

தலைவர்: திரு. எஸ். ஜெகதீசன்.

உபதலைவர்: திரு. சு. பரணீதரன்.

செயலாளர்: திரு. பொ. லிங்கேஸ்வரன்.

உபசெயலாளர்: திரு. இ. ஜெகதீஸ்வரன்.

பொருளாளர்: திரு. கே. ஜெயதேவன்.

செயற்குழு:-

திரு. வீ. நெய்வேந்திரம். திரு. கி. கருணாநிதி.
திரு. யோ. ஆறுமுகம். திரு. அ. பகீதரன்.
திரு. மா. மகிழ்தாசன். திரு. க. கணபதிப்பிள்ளை

**Kontaktperson:**

Herr. S JEGATHEESAN.
(JEGER).
FORMANN.
NORDMØRE TAMIL FORENING,
DALEGATA-90
6500 KRISTIANSUND.
NORWAY.
TLF. 073 82953.


## நார்மோர தமிழர்சங்கம் கிறிஸ்தியான்சுண்ட்.

* கிறிஸ்தியான்சுண்ட், ஒப்டால், ஆவரோய் வாழ் இனிய தமிழரின் ஒருங்கிணைந்த மன்றம்



www.padippakam.com





# எழுதுங்கள்! எல்லோரும் எழுதுங்கள்!!

ஓட்டப் பந்தயத்தில்
ஓடுபவர்கள் எல்லாருமே
முதலில் தான் வரவேண்டும்
இடைசியாய் யாருமே
வரக்கூடாதென்று
கட்டளையிட்டால்
நடக்கின்ற காரியமா?

பயிரோடு களைகளும்
வளர்கின்ற காரணத்தால்
பயிரிடுதலே தவறென்று
வாதிடுதல் முறையாகுமா?

எனக்கு மட்டுமே உரிமையுண்டு
கைதட்டுவதோடு உங்கள்
கடமை முடிந்ததென்று
கிட்டஙாவிடுபவர்கள்
அஞ்சி நடுங்கும் படி
எழுதுங்கள்
எல்லோரும் எழுதுங்கள்.

— மலராசிரியர்.

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் வருடங்கள் 60

| | | | |
|---|---|---|---|
| பிரமோதூத | 1930—31. | சார்வரி | 1960—61. |
| பிரஜோர்பத்தி | 1931—32. | பிலவ | 1961—62. |
| ஆங்கிரச | 1932—33. | சுபகிருது | 1962—63. |
| ஸ்ரீமுக | 1933—34. | சோபகிருது | 1963—64. |
| பவ | 1934—35. | குரோதி | 1964—65. |
| யுவ | 1935—36. | விசுவாவசு | 1965—66. |
| தாது | 1936—37. | பராபவ | 1966—67. |
| ஈஸ்வர | 1937—38. | பிலவங்க | 1967—68. |
| வெகுதான்ய | 1938—39. | கீலக | 1968—69. |
| பிரமாதி | 1939—40. | சௌமிய | 1969—70. |
| விக்கிரம | 1940—41. | சாதாரண | 1970—71. |
| விஷு | 1941—42. | விரோதிகிருது | 1971—72. |
| சித்திரபானு | 1942—43. | பரிதாபி | 1972—73. |
| சுபபானு | 1943—44. | பிரமாதீச | 1973—74. |
| தாரண | 1944—45. | ஆனந்த | 1974—75. |
| பார்திப | 1945—46. | இராக்ஷச | 1975—76. |
| விய | 1946—47. | நள | 1976—77. |
| சர்வஜித்து | 1947—48. | பிங்கள | 1977—78. |
| சர்வதாரி | 1948—49. | காளயுக்தி | 1978—79. |
| விரோதி | 1949—50. | சித்தார்த்திரி | 1979—80. |
| விக்ருதி | 1950—51. | ரௌத்திரி | 1980—81. |
| கர | 1951—52. | துன்மதி | 1981—82. |
| நந்தன | 1952—53. | துந்துபி | 1982—83. |
| விஜய | 1953—54. | ருத்ரோத்காரி | 1983—84 |
| ஜய | 1954—55. | ரத்தாக்ஷி | 1984—85. |
| மன்மத | 1955—56. | குரோதன | 1985—86. |
| துன்முகி | 1956—57. | அக்ஷய | 1986—87. |
| ஹேவிளம்பி | 1957—58. | பிரபவ | 1987-88 |
| விளம்பி | 1958—59. | விபவ | 1988-89. |
| விகாரி | 1959—60. | சுக்கில | 1989-90. |



தொகுப்பு:
வீ. யோகநாதன்.

www.padippakam.com



அன்பர்களே! நீங்கள் பிறந்த நட்சத்திரம் தெரிந்து கொண்டால் உங்கள் சிறப்பான குணத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா? இதோ..........

| நட்சத்திரம் | பிறந்தவர் குணம் |
|---|---|
| அஸ்வினி | - எச்செயலையும் செம்மையாகச் செய்பவர் |
| பரணி | - பெற்றோருக்குப் பெருமை சேர்ப்பவர். |
| கார்த்திகை | - வாக்குச் சாதுரியம் மிக்கவர். |
| ரோகிணி | - பிறருக்கு உதவி செய்யும் தன்மையுள்ளவர். |
| மிருகசீர்ஷம் | - சுறுசுறுப்பு மிக்கவர். |
| திருவாதிரை | - கண்ணியம் மிக்கவர். |
| புணர் பூசம் | - சிக்கனமாக இருப்பவர். |
| பூசம் | - வாதிடும் திறமை மிக்கவர். |
| ஆயில்யம் | - எதிரிக்கும் அஞ்சாதவர். |
| மகம் | - பயணம் செய்வதில் விருப்பம் உள்ளவர். |
| பூரம் | - படிப்பில் ஆர்வம் மிக்கவர். |
| உத்தரம் | - காமம் நிறைந்தவர். |
| ஹஸ்தம் | - குரு பக்தி நிறைந்தவர். |
| சித்திரை | - முன் கோபக் காரர். |
| சுவாதி | - சாப்பாட்டுப் பிரியர். |
| விசாகம் | - நீதி தவறாதவர். |
| அனுஷம் | - புகழ் ஆர்வம் மிக்கவர். |
| கேட்டை | - தெய்வபக்தி நிறைந்தவர். |



| நட்சத்திரம் | பிறந்தவர் குணம் |
|---|---|
| மூலம் | - தெய்வீக காரியங்களில் ஈடுபாடு கொண்டவர் |
| பூராடம் | - தன்னை நம்பியவருக்கு உதவி செய்பவர். |
| உத்தராடம் | - சுற்றத்தாரைப் போற்றும் மனப்போக்கு உள்ளவர் |
| திருவோணம் | - மகிழ்ச்சி நிறைந்தவர். |
| அவிட்டம் | - தியாக மனப்பான்மை கொண்டவர். |
| சதயம் | - உண்மையுள்ளவர். |
| பூரட்டாதி | - பிறர் சொல் கேளாதவர். |
| உத்தரட்டாதி | - நல்லவருக்கு நல்லவர்; கெட்டவருக்கு கெட்டவர் |
| ரேவதி | - பிறர் சொற்படி நடப்பவர். |

தொகுப்பு:—
சரண்யா தெய்வேந்திரன்

---

## தகுதி



வாழை மரம்
வெட்டும்
கத்தியால்
பனை மரத்தை
வெட்டினால்
அது
பிள்ளை
வாழை மரத்தைக்
கூட
வெட்டும்
தகுதியை
இழந்துவிடும்!

சே. கார்த்திகேயன்.

www.padippakam.com

7



# எனக்கு வந்தால்தான்......

● சின்னத்துரை சுப்பிரமணியம்

கிறிஸ்தியான்சுண்ட் நகரசபைக் கட்டடம். வழமைக்கு மாறாக ஒரே சனக் கூட்டம்.

கையில் இருந்த பத்திரிகையொன்றைப் புரட்டிக் கொண்டிருந்தேன்.

அப்பொழுது கையில் 'பைலு'டன் அந்தப் பக்கம் வந்த நகரசபை அதிகாரி ஒருவர் என்னைப் பார்ப்பது போல முகத்தில் ஒரு புன்னகை!

என்னை அறியாமலே எனது வாய் "வணக்கம்" கூறிற்று.

அடுத்த கணமே அவர் என்னைக் கண்டும் காணாதது போல, சட்டென்று அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்று விட்டார்.

பகீரென்றது எனக்கு!

தன்மான உணர்வு என் தலையைக் குனிய வைத்தது!

எவ்வளவு பெரிய பதவி வகித்தால் என்ன? மனிதனுக்கு இவ்வளவு கர்வம் இருக்கக் கூடாது!

நேற்றுக் கூட அவர் நல்ல 'மூடில்' இருந்தாரே? அதற்குள் 'மூட்' மாறக் காரணம் என்ன? —ஒருவேளை தாழ்வு மனப்பான்மையோ?

அல்லது 'ஜோக்' ஒன்றை ஆர்வமுடன் அவர் சொன்னதைத் தட்டிக் கழித்ததுதான் அவரது கோபத்துக்குக் காரணமாக இருக்குமோ? அல்லது 'பந்தம்' பிடிப்பதற்காக யாராவது எதையாவது ஊதி வைத்திருப்பார்களோ?

ஒன்று மட்டும் உண்மை! அவருக்கு என்னைப் பிடிக்கவில்லை. அதனால்தான் அவர் முகத்தை 'உர்'ரென்று வைத்துக் கொண்டு

படிப்பகம்

www.padippakam.com

போய்விட்டார்.

ஒரே அவமானமாய் இருந்தது... 

சிகரெட் ஒன்றைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தேன்.

அப்போது எனது நண்பன் ஜோதி ஏதோ ஒரு உதவி கேட்டு என்னிடம் வந்தான். அவனது தேகம் வாடி இருந்தது. ஏதோ சொல்லத் தயங்குவது போலிருந்தது.

நான் அவன் பக்கம் திரும்பி என்ன என்பது போல நோக்கினேன்.

'என்னடாப்பா? என் மீது உனக்கு கோபமா?' என்றேன்.

"இல்லே! உன் மீது எனக்கு என்ன கோபம்?" — அவனைச் சமாதானப்படுத்தினேன் நான்.

"அப்போ இன்னைக்கு காலையில உனக்கு 'ஹலோ' சொல்லியும் ஏன் பதிலே தரலே?"

ஹலோவா? எனக்கா? இன்னைக்கா? காலை நடையிலா?

நான் கேட்டேன்.

"பஸ் நிலையத்தில் நீ நின்ற போது ஒரு தடவையும் சிகரெட் வாங்கும் போது இரண்டாவது தடவையும் சொன்னேனே? இரண்டு தடவையும் நீ பதிலே தரலே..."

அவன் பேச்சு என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. "உன் மாதிரி ஒருத்தன் அவன். கொஞ்சம் போய் பேசத் தெரியாது அவனுக்கு".

அப்படிப்பட்ட அவன் மனம் புண்படும்படி நடந்து விட்டேனே நான்!

எனக்குத் தர்மசங்கடமாய் இருந்தது.

எனக்கு இருந்த ஏதோ சிறிய கோபத்தின் போக்கிலேயே அவன் சொன்னதை நான் கவனிக்கவில்லை போலும்!


இந்தச் சின்னக் கோபம்தானே என்னை இப்படி ஆட்டி வைத்தது என்னில் பொறுப்பில்லா அதிகாரியாய் பாவம்!... என்ன பெரிய கோபமோ?

சே...!

— ஒரு நல்ல மனிதனைப் பற்றி என்னவெல்லாம் நினைத்து விட்டேன்!!

www.padippakam.com





# போதிமரம்

*சின்னத்துரை ஜெகதீஸ்வரன்*

கடுமையான ஊரடங்கு உத்தரவின் தாக்கத்தால் இலங்கையின் பாதி ஊர்கள் பகலிலும் உறங்கிக் கொண்டிருந்தன.

அதுவும் வவுனியா மாவட்டத்தில் பட்டினி கோரத்தாண்டவம் ஆடியது.

என்னால் ஆன உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ராணுவத்தை எப்படியோ சமாளித்து அந்தப் பகுதியை நோக்கி விரைந்தேன்.

எங்கும் கேட்டிட்டாலும்... நான் [illegible] [illegible] நின்று [illegible] [illegible] [illegible] உதவியது.

கையில் உள்ள உணவுப் பொட்டலங்களை வெள்ளம் வழியில் பார்த்தவர்களுக்குப் பகிர்ந்து கொடுத்துக் கொண்டே வந்த என் வீட்டிற்குப் போது மிஞ்சியிருப்பது பால்புட்டி ஒன்றும் சிறிய பாண் துண்டுமே. ஒவ்வொரு வயதாகக் காணும்.

ராணுவத்தின் நடமாட்டம் திகிலளித்ததால் இதய மத்தளம் வேகமாக அடிப்பது என் காதுகளுக்கே தெளிவாகக் கேட்டது.

ஓ... மனிதனுக்கு இந்த பயம் கூடாது. மடியில் கனமிருந்தால் வழியில் பயம்.

பக்கத்தில் இருந்த பட்டுப்போன மரத்தில் தாவி ஏறினேன்.

ராணுவம் நெருங்கிவிட்டது.

www.padippakam.com



ஆகாய தூரத்தில் எதையோ தேடிக் கொண்டிருப்பவர்கள் யார்?

நான் கொஞ்சநேரம் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தேன். விமானத்து நிறைய ஏதாவது விசேடங்களோ என்று காடெல்லாம் அவர்கள் உணவைத் தேடுகின்றார்களா?

இறந்துக் கடலில் ஏதாவது பிணங்களாவது கிடைக்கோ என்பன இடங்களைத் தேடுகின்றார்கள்.

அவர்களுக்கு இவ்வளவே யார் அவர்களை வேட்டையாட இவர்கள் தேர்ந்தெடுப்பார்கள். பாவம்!

பட்டணத்திலுள்ள காளைப் படையினர்கள் கேட்டால் போதும். பக்கத்தில் அவனுடைய கையில். உடனே நான் வேலையில் குதிப்பான்.

மெல்ல விலகினேன்!

ராணுவத் தினசரிப் பற்றிய பயம் அவர்களுடைய உத்தரவு வெளியேற பயம் இருந்தது.

அவர்கள் என்னைப் பார்த்ததும்....

நான் பால் புட்டியை கட்டி அருகே வைத்து வணக்கம் செய்தேன்.

அவர்கள் என்னை நோக்கிப் பறந்து வந்தனர். பாவம் பசியால் துவண்டுபோய் களைப்பாய்த் தெரிந்தது. எதுவும் தேடி வழியே வந்ததில்லை பாவம். எத்தனை நாள் பட்டினியோ? இப்போதே இப்படி... இன்னும் எத்தனை நாட்களுக்கு இங்கேயே தனித்து இருக்க வேண்டுமோ? அதற்குள் நிலைமை என்னவாகுமோ?

என் கையில் இருந்த பால் புட்டியைப் பார்த்ததும் அவன் முகம் இன்னும் மெத்தச் சந்தோஷமாய்க் கொண்டது.

தங்கள் பசிக்கு உயிர் கொடுக்கப்போவது போல என்னைப் பார்த்தார்கள்.

பால் புட்டியை திறந்து வைத்துக்கொண்டேன். வேகமாக வாங்கினவன்.. அதே வேகத்தில் முட்டுப்பட்டு தடவை பானையில் மொத்தப் புட்டி தீர்ந்தது....

www.padippakam.com

வறட்சியால் பசி மறந்திருந்த" நிலம் ஒரு நொடியில் பால்
முலையைப் பொத்துவிட்டது.
நிலத்தை தன் நாக்கால் மெதுவாய் பாலகனின் நாக்கு
அளந்ததுதான் மிச்சம்.
இனிய பால் இவனின் வாய் புகுமோ?

"போடா... உன் சுவாசத்தால் தேசத்தைக் காக்க
வேண்டிய பாலே இப்போது தடுக்கப்பட்டதே... உனை...
உனை..."

பாலகனின் தந்தையைத் தேடினேன்.
எப்போது அவன் உன்னது அழிய வரம் தந்திட்டதே.
நான் இதை பார்க்கப் பொறுமை இல்லை போல போயிருந்தேன்.
மேலே தோழர் கண்களில் சேர்ந்த நீர்மணி ஒவ்வொன்றை
எண்ணிப் பார்த்துக் கொண்டேன், பின் அவர் பாலை
பாலகனிடம் கொடுத்தேன்.
சேர்ந்துப் போயிருந்த இன்னும் கிடப்பது உதிர்த்துவிட்டு
வந்தது ஒன்று என் நாவால் தேடிப் பாலை விழுந்த



படிப்பகம்

மெதுவாக வாசித்துக் கொண்டான் பாலகன். 12

அந்தவேளை பின்னால் வெளத்தில் அந்தப் பிரமாத சப்தம் ஒன்று அங்கே நிகழ்ந்தது.

பாலகனின் கையில் இருந்த பாலை உடைந்து சிதறிய தப்பக்காரன், மனிதர் கொண்டாடல் "டமக்" "டமக்" என்று கண்டு கண்திறப்புறுதல் காப்பாற்ற விட்டான். அதுவே விடுதலைப்பட்டான் என்று சொல்லலாம்.

அடப்பாவி!

வந்தது எனக்கு அழுகை.

"அவ்வளவு நாளே... அவளை இப்படி உயிரோடு பயிற்றுவித்து உன்னதமாக இருக்கும் வந்த உதவியையும் நீயோ உன் தந்தையும் கொன்றாயல் கொன்றுவிடுவ. அவளை என் உடம்பில் இருந்து துடைத்து விட்டு உன் நெஞ்சுக்குள் வைத்துக் கொண்டுவிட்டு நீ... கொன்றுவிடுவ. நீ எவனாய் ஆகி விட்டாய்? உன்னை என்னால் அப்படி ஏன் கொல்லவே நான் கூறு. உனக்கு என்னால் ஒன்றும் தெரியாது... உன் மனைவியின் மகன்."

எழுந்த நான் அவன் முகம் அதுவும் அதை அவனை உதறி எறிந்தேன்.

"நீ உயிரோடு இருந்தால் காப்பாற்றியிருப்பாய் நீ உன் பேரன் உயிரோடு இருந்தால் என்ன செய்தாய் என்ன..."

ஏதோ அவனை அதிர்ச்சி அவன் வாய் திறந்து பேச ஆரம்பித்தான்.

"ஐயா... நீங்கள் நினைப்பது போல நான் ஒன்றும் செய்து விடவில்லை. நானும் நேரில் வந்தவன் அப்படி நீங்கள் ஏதோ ஏதோ செய்து அழித்தவரைப் போல நீங்கள் பேசுகிறீர்கள் என்று நீங்கள் நினைக்க வேண்டாம் நீங்கள் வந்தீர்கள். இப்படி அந்தப் பாலை அவர்கள் காப்பாற்ற... அதுவே பதில் அவர் காத்திருந்தார். இல்லை அந்த வேளை... அதனாலே இருந்த நீங்கள் என்று அறியாமல் நான் காப்பாற்றி விட்டேன் இருந்தால் அந்த வேளை உண்மை எப்போதாவது ஏற்படுவது இந்த நாட்டில் தேவைகள் போல அவர்களுக்கு எதிராகவே இவர் நான் செய்திருப்பன்.. அவர்களை யார் காப்பாற்றுவார்கள் அதனால் தான்.."

அவனது பேச்சுக்கு சரியாகவே பட்டது.

www.padippakam.com



## ஊனம்.

இப்பொழுதெல்லாம்
பேருந்தில்
"ஊனமுற்றோர்"
இருக்கையில்தான்
அமர்கின்றேன்.
என் இதயத்தை
திருப்பித்தராமலே
நீ
இன்னொருவன்
இதயத்தில்
குடிபோனபின்
இதயம் இழந்த
நான்
ஊனமுற்றவன் தானே?

• சரவணா.நடேஸ்வரன்





## கணக்கு

சோம்பலை
கழித்து
உழைப்பைக்
கூட்டி
திறமைகளையும்
விடாமுயற்சியையும்
பெருக்கி
வாழ்க்கையை
வகுக்கச்
சொன்னார்கள்.
கழித்துக்
கூட்டி
பெருக்கி
வகுத்து
கையிருப்பைக்
கணக்குப் பார்த்தேன்.
கணிசமாய்
கையில்
இருந்தது
வெற்றி!

• சேதுபதி தெய்வேந்திரன்.

படிப்பகம்

சிமினி விளக்காய்....



தமிழ்
எட்டாத தூரத்தில்
அலங்கார விளக்காய்
இருப்பதை விட
எட்டும் தூரத்தில்
சிமினி விளக்காய்
இருந்து போகட்டும்.
அதை அணைக்க
ஏன்
புயலாய்
மாறுகின்றீர்?

• அப்பையா பகீதரன்.

— o —

வித்தியாசமான வேதனை.



சிறை
வைக்கப்பட்டவன் நான்
வேதனைப் படுவான்
ஆனால்
சிறை வைத்தவன்
இங்கே
வேதனைப் படுகின்றேன்.
உன்னை...
என்
இதயச்சிறையில்
அடைத்து விட்டு
வேதனைப் படுகின்றேன்.

• சாம். க. கணபதிப்பிள்ளை

— o —

www.padippakam.com



ஒப்பரைத்தீவின் பிரதமதபால்

# நீலக்கல் மோதிரம்

மோர்த்தி! வ. கனகரத்தினம்

அலுவலகத்தின் முன்பாக ஆறுமுகம். கையில் அப்பொழுது தான் மாற்றப்பட்ட விடுமுறைகால மோதிரப்பணம். சுமார் பத்தாயிரம் ரூபாய் இருக்கும். "விடுமுறைகாலப் பணத்தை என்ன செய்வதாக உத்தேசம்?" எதிர்ப்பட்ட இந்திரனின் கேள்வி இது. இந்திரனின் கையிலும் விடுமுறைகால மோதிரப் பணம் இருந்தது. "எப்ப பார்த்தாலும் இந்த மோதிரப் பணத்தைக் கொண்டுபோய் மனைவியின் கையில் கொடுத்திடுறது. சித்திரைப் பட் வரும் பொழுது பட்டுப்புடவை வாங்கிவோம். வெறுப்பாய் போச்சப்பா!" என்பது ஆறுமுகத்தின் பதிலானது. "எனக்கும் அப்படித்தான்". பெருமூச்சோடு இந்திரனின் வார்த்தை வெளி வந்தது.

"பட்டுப்புடவை! பட்டுப்புடவை! அப்படி என்னதான் இருக்கோ பட்டுப்புடவையில். இந்தப் பணத்தில் ஜாலியா லண்டன், பாரிஸ் போகலாம் என்று எனக்கு ஆசை. முடியுதா?".

"ஆறுமுகம்! எனக்கொரு ஐடியா தோணுதப்பா!".

"என்ன"?

இந்திரன் சொன்னதைக் கேட்டதும் ஆறுமுகத்தின் முகம் மலர்ந்தது. "நல்ல ஐடியாதான்!".

ஆறுமுகத்தின் மனைவியைத் தீவிரமாக பரிசோதித்துக் கொண்டிருந்தார் டாக்டர் — ஆறுமுகத்தின் நெருங்கிய நண்பர். 'உனக்கு உடம்பு நன்றாகவேயில்லை. ஏதாவது மருந்து சாப்பிட வேண்டும்' என்று 'அன்போடு' சொல்லி மனைவியை அவரிடம் கூட்டி வந்தது ஆறுமுகம்.

பரிசோதித்த டாக்டர், 'அடடா! உங்க தொடையும் வயிறும் திட்டுத் திட்டாய் தேமல் மாதிரி சிவந்திருக்கே என்றார். "சீரியஸா டாக்டர்?" ஆறுமுகத்தின் மனைவியின் கேள்வியிது. முகத்தில் பயம் கலந்திருந்தது.

"ஆமாம்! ஆனால் பயப்படாதீங்க நான் மருந்து தாறேன். உங்க சருமத்தைப் பார்த்தால் பட்டுப் புடவை உங்களுக்கு அலர்ஜி என்று தெரியுது.

படிப்பகம்

www.padippakam.com



எந்தக் காரணம் கொண்டும் நீங்க பட்டுப்புடவை கட்ட வேண்டாம்!" என்று சொல்லி விட்டோமடா?, ஆறுமுகத்துக்கு மட்டும் தெரிந்து போதிக் கண்ணடித்தார்.

அவள் முகம் சோர்ந்து போனது.

ஆறுமுகம் வருத்தமாக... "ம்..ம்..! இந்தத் தடவை இந்தப் பணத்தில் உனக்கு இந்தியாவில் இருந்து பட்டுப் புடவை வரவழைக்கலாம் என்று நினைத்தேன். ஆனால் அதுதான் முடியவில்லையே" என்று சொன்ன போது மனைவி முற்றாகவே நம்பி விட்டாள்.

அடுத்த நாள் மாலை.

வழமை போல் வேலை முடித்து வீடு திரும்பிய ஆறுமுகத்திடம், "என்னங்க" என்றாள் மனைவி.

கொஞ்சம் கூடுதலான கொஞ்சல் அந்த ஒரு சொல்லிலேயே இருப்பதாகப் பட்டது ஆறுமுகத்திற்கு.

"எனக்கு ஒரு நீலக்கல் பதித்த மோதிரம் வாங்கித் தாங்க...!" என தொடர்ந்தாள் மனைவி.

"எதுக்கு....!" திகைப்புடன் ஆறுமுகத்தின் வாய் திறந்தது.

"எனக்கு உடம்பில் நோவு மாதிரி வருகிறதே. அதற்கு நீலக்கல் மோதிரம் போட்டுக் கொண்டால் சரியாகி விடுமாம். நீங்கள் வைத்திருந்தீர்களே ஒரு ஜோதிடப் புத்தகம். அதில் என் ராசிக்குப் பொருந்தும். ஒரு நீலக்கல் மோதிரம் செய்து போட்டுக் கொண்டால் எல்லாம் சரிவந்துவிடுமாம்."

"எனக்கு மட்டுமில்லை. உங்க கிளார்க் சித்திரனின் மனைவிக்கும் அப்படித்தான் இருக்குதாம். ரெண்டு பேரும் ஒரே ராசி. அவளுக்கும் போன் பண்ணிச் சொல்லிட்டேன்".

ஆறுமுகத்திற்கு உடம்பு ஆடியது! அனேகமாக அங்கே சித்திரனுக்கும் அப்படித்தான் ஆடிக் கொண்டிருக்குமோ?".

(யாழ் கந்தவனம்)


படிப்பகம்

www.padippakam.com



# ஆ, என்ன இன்பம்!

● க.தேவராஜா



அன்பைக் கொடுப்பதிலும் இன்பம்.

அன்பைப் பெறுவதிலும் இன்பம்.
ஆ... அலாதியானது அது!!

உலகிலேயே மிகவும் பெரியது அன்புதான். இந்த அன்பைப் புரிந்தவர்களும் உண்டு. புரியாதவர்களும் உண்டு. சிலர் இந்த அன்பைப் பயன்படுத்தி மற்றவர்களை வசப்படுத்தி வைத்திருக்கின்றார்கள். எமது உள்ளத்திலே தூய்மையான உண்மையான அன்பு இருந்தால் அந்த அன்பை யாராலும் பிரிக்க முடியாது.

"அன்புக்குண்டோ அடைக்குந்தாழ்"

ஒரு ஏழையை ஒரு பணக்காரன் தனக்கு அடிமையாகத் தான் நினைக்கின்றானே தவிர தன்னைப் போன்ற மனிதனாக நினைப்பதில்லை. இதைப் புரிந்து கொள்ளாதவர்கள் அந்த ஏழைகள் அந்த பணத்திற்கு அடிமைப்படுகின்றார்கள்.
சிலர் பணத்துக்கு மதிப்புக் கொடுத்து

www.padippakam.com



தூய்மையான அன்பை பிரதிபலிக்கின்றீர்கள். நீங்கள் பெற்றோரையும் உடன்பிறப்புகளையும் உறவினர்களையும் மனிதப்பண்புகளும் நன்னெஞ்சத்தினால் இல்லாமல் இல்லை. அன்பும் பாசமும் செழித்துத் தழைப்பதால் சுத்த மனிதத் தெய்வங்கள் பலர் அவர்கள் ஏராளம்.

அன்பாய் இரு. அடிமையாகாதே!

ஒரு பணக்காரன் தான் ஒரு குற்றத்தைச் செய்த பின்னர் அக்குற்றத்தை ஒன்றுமே அறியாத ஏழை மீது பழி சுமத்துகின்றான். ஆனால் குற்றம் புரிந்தது அப் பணக்காரன். தண்டனையை அனுபவிப்பது ஏழையா? இது என்ன சோதனை. பணக்காரனுக்கு ஒரு நியாயம் - ஏழைக்கு ஒரு நியாயமோ?

ஒருசிலர் பணக்காரனுக்கு ஏவல் செய்யும் அடிமைகளாகத் தமது உயிரையும் கொடுத்துவிடுவார். ஆனால் அன்பு கொண்ட இதயத்துக்கு அப்படிச் செய்வோர்கள். இப்படிப் பட்டவர்கள் பணத்துக்காக தங்களுடைய அன்பான மனித அடிமையை நேர்மையின்றி தொழில் செய்வதற்கே விற்கின்றார்.

பணம் இருந்தால் உலகில் பெரியவனாகி விட முடியுமா? இல்லை! இல்லவே இல்லை! அன்புதான் ஒருவனை உயர்த்தும். அன்பு உள்ளம் கொண்டவன்தான் உலகில் சகலதும் உடையவன். அவனால் சாதிக்க முடியாதது உலகில் எதுவுமே கிடையாது.

வாழ்க்கையோ சொர்க்கமாக அமைந்திட மனிதனது அன்பிலே பற்றுதல் வேண்டும்.

அன்பு கொண்டோர் உள்ளம் இறைவன் வாழும் இல்லம்.

ஒருவரிடம் ஒரு பங்கு அன்பு செலுத்துங்கள். உங்களிடம் அது இரு பங்காகத் திரும்பிவரும்.

அன்புக்காக எதையும் இழக்கலாம் ஆனால் எதற்காகவும் அன்பை இழக்கக் கூடாது.

ஆத்திரப்படக் காரணம் உண்டாகும் ஆனால் அன்பு காட்டக் காரணம் தேவையா!

www.padippakam.com



# வகுப்பில் நகைச்சுவை



கி.சந்திரசேகர்

— ஆவரோயம் ஒருகிறுத்து! இங்கு பத்து தமிழ் மாணவர்கள் இருந்தோம். ஒருநாள் வகுப்பில் ஆசிரியர் என்னை ஏதாவது "ஜோக்ஸ்" சொல்லுமாறு தெரிவித்தார். 

— இலங்கையில் ஒருநாள் நானும் எனது நண்பனும் புகையிரதத்தில் பயணம் செய்தோம். தவறுதலாக எனது நண்பன் 'டிக்கட்' வாங்கவில்லை. 'டிக்கட் செக்கரும்' தூரத்தே வருவது தெரிந்தது. காசில்லாததால் 'டிக்கட்' வாங்கவும் முடியாது. உடனே ஒரு 'ஐடியா'! முதலில் எனது நண்பன் அருகில் இருந்த 'டாய்லட்'டில் நுழைந்தான். அவனைத் தொடர்ந்து நானும் அதே 'டாய்லட்'டில் நுழைந்தேன். செக்கர் கதவைத் தட்டியதும் மெல்லத் திறந்த கதவு மேலே எனது டிக்கட்டோடு கையுடன் நீண்டது. செக்கரும் தனது கடமையை முடித்துச் சென்று விட்டார். எப்படி இருக்கு! திரும்ப வந்து சீட்டில் இருந்ததும் எதிரே இருந்த பெரியவர் என்னை முறைத்தார்.



பின்னர் அடுத்தவாரம் மேலும் திரும்பவும் அதே ரயிலில் பயணம் செய்தோம். பெரியவருக்குப் பக்கத்தில் அவரது மனைவி! வழமைபோல் செக்கர் வந்தார். எனக்குத்தான் 'டென்ஷன்' தெரியுமே? ஆனால்... பெரியவர் என்னை முந்திவிட்டார். அவரும் அவரது மனைவியும் ஒரே டாய்லட்டில் நுழைந்தனர். அவரிடமும் ஒரு டிக்கட் தான் என்ற உண்மை அப்பொழுது தான் எனக்குப் புரிந்தது.

www.padippakam.com

நீங்கள் எனக்கு ஒரு ஐடியா! விரைவாக எழுந்து 
சென்று டாய்லட் கதவைத் தட்டினேன். பெரியவர்
சிக்கர் என நிமிர்த்துக் கொண்டு வேகமாக புத்தகக்
கட்டுடன் வெளியே நீட்டினர்.

"அதை வாங்கிக் கொண்டு வந்து உட்கார்ந்து
விட்டேன்." என்றார் தெய்வேந்திரன்.

எனக்கு ஒன்று கேட்கின்றேன் என்று
எழுந்தார் ஹேமச்சந்திரன். 

இன்று எழுத்து ஒன்றின்பின் ஒன்றாகப்
போய்க் கொண்டிருந்தது. அதில் முதல் எழுத்து சொன்னது, என்
பின்னாலே இரண்டு எழுத்து வருகின்றதென்று. இரண்டு எழுத்து
சொன்னது இல்லை ஒரு எழுத்து போதும். பின்னால் ஒன்று
வருகுது என்று. ஆனால் கடைசி எழுத்து சொன்னது
என் பின்னாலே இரண்டு எழுத்து வருவதாக.!!
அது எப்படி?

நாம் பலவாறு யோசனை செய்து கொண்டிருக்கும்
போது, "இன்று மிஸ்டர். கடைசி எழுத்து பொய் சொல்லுது"
என்றார் 

நவத்தின் முறை வந்தது. ஜப்பான்காரரும் தமிழரும்
சேர்ந்து பெரிதாக பல மாடிக் கட்டிடம் கட்டி முடித்தார்கள்.
என்ன பெயர் வைக்கலாம் என்பதில் இருவருக்கும்
தகராறு. இருவரும் தத்தமது மொழியில் தான் பெயர்
இருக்க வேண்டும் என்றார்கள். கட்டிடத்தை அழிக்கப்
போவதாக இருவரும் சவால் விட்டனர். ஆனால் தமிழரின்
யோசனைப் படி இரு மொழியிலும் பெயர் வைக்கப்பட்டது.
என்ன பெயர் தெரியுமா?

NIKIMO நிற்கிமோ!!


கேள்வியின் நேரம் இது:- ஒரு சின்னக் குழந்தை
கிணற்றில் தவறி விழுந்துவிட்டது. எல்லோரும் சுற்றி
நின்று 'ஐயையோ' என்று பரிதாபப்படுகிறார்கள்.
ஆனால், யாருக்கும் காப்பாற்றத் தெரியவில்லை.

ஆனால்.. எதிர்பாராதவிதமாக ஒரே ஒரு ஆள் தெரிந்து, இழந்தவைகளைக் காப்பாற்றி கொண்டு வந்து சேர்த்தார்.

"அதெப்படிங்க.. இத்தனை பேர் தவறவிட்டுக் கிட்டுக்கொண்டு பொழுது நீங்க மட்டும்"... என்று அவரிடம் கேட்டதற்கு, அவர் சொன்னார்....

"எனக்கே தெரியலைங்க.. எந்த அயோக்கியப் பய என்னைத் தள்ளிவிட்டான் என்று"...



கார்த்திக்கின் முறை வந்தது...

நாய்க்கு வால் அறுந்தால் எங்கே போகும்? என்று கேட்டு விட்டு சிறிது நேரம் கழித்து Re-tail Shopக்கு என்று முடித்தார்.

கல்யாணமாகாத பெண் கீழே நிற்கிறாள் என்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கச் சொன்ன உடனே ரமேஷ் தொடர்ந்து சொன்னது...



MISS UNDER STAND.



"பிரிட்ஜில் எதை வைத்தாலும் கெட்டுப் போகாது என்று வேலைக்காரனிடம் சொன்னது தப்பாய் போயிற்று" என்ற தாத்தாவிடம் "ஏன்? என்ன ஆச்சு" என்றதற்கு "அவன் ஊரில் இருந்து வாரவரைக்கும் அவன் பெண்டாட்டியை அதில வைக்கிறான்".

இறுதியாக "அந்தக் காலத்தில் பத்து மைல் தூரம் நடந்து போய்த்தான் பள்ளிக்கூடத்தில் படிக்க நேர்ந்தது" என்று எல்லோரும் சொல்ல

"அதனால் தான் படிப்புக்கும் உங்களுக்கும் வெகுதூரம் என்று சொல்றாங்களோ?" என்றார் ஆசிரியர்!

www.padippakam.com



## சாடாதீர்!

கடமை தவறாது
ஒளி தருகையில்
மழை இருளும்
இருள் மேகங்களும்
மறைப்பதால்
சூரியனை—
குறை கூறி
இலாபம் என்ன?
மழை இருளையும்
இருள் மேகங்களையும்
கிழித்தெறியுங்கள்
சூரியன்
அதன் கடமையைச்
செவ்வனே செய்வது
புரியும்!

• சு. பரணிதரன்.





## அவரது பார்வை


அள்ளிக் கொடுப்பவன்
அறிவு கெட்டவன்
கிள்ளியும்
தெளிக்காதவன்
உலகிற்குக்
கொடைவள்ளல்
உண்மையைச்
சொல்பவன்
ஊருக்குப் பகைவன்
உண்மையை
மறைப்பவன்
அகில
உலகிற்கே நல்லவன்.
பாவத்தை
எதிர்ப்பவன்
பயங்கர
மோசக்காரன்
தினம்
பாவம் புரிபவன்
இப்—
பாரோர்க்கு
நல்லவன்!
ஆம்!!
அவரது பார்வையில்
இந்த உலகமே
இப்படித்தான்.

• மாணிக்கமகிழ்தாசன்.

படிப்பகம்

www.padippakam.com






# மனம் என்னும் மேடை மீது...

— முதலில் நாம்,

மனம் என்பது என்ன? அது எங்கே இருக்கின்றது? அது நம்மை எந்த வகையில் பாதிக்கின்றது? அதில் பதியும் விடயங்கள் மறையக் கூடியனவா? அல்லது அவை நிரந்தரமாகவே பதிந்து விடுகின்றனவா? மனதில் பதியும் விடயங்களால் உடலுக்குக் கெடுதி ஏற்படுகின்றதா? போன்ற விடயங்கள் பற்றிச் சிறிது ஆராய்வோம்.

இவை பலருக்குப் புதியனவாகவும் சிலருக்குத் தெரிந்த தெளிந்த விடயங்களாகவும் இருக்கின்றன.




எமது மனம், எங்கே இருக்கின்றது? பலரும் அன்றாடம் தமது உரையாடலில் அவனுடைய நல்ல மனசு, அல்லது எனது மனசு நல்ல மனசு என்கிறதுக்கு பொதுவாக நெஞ்சையே சுட்டிக்காட்டுவதை அவதானிக்கலாம். மற்றும் இலக்கியங்களிலேயே மனதைப் பல மொழிகளிலும் ஒப்பிடுகின்றார்கள். உதாரணமாக, தமிழில், ஆங்கிலத்தில், ஜேர்மனில் பல சம்பவங்கள் உண்டு.

அதனால் மனம் எங்கே உள்ளது என்ற கேள்விக்கு பலரும் நெஞ்சில்தான் உள்ளது என்று பதிலளிப்பார்கள்!

ஆனால் உண்மையில் எமது மனம் மூளையின் ஒரு பகுதியே என்பதை மருத்துவ விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளார்கள்.

மனதில் ஏற்படும் மாறுதல்கள் அதிகமாயில் நெஞ்சில் உணர்ந்தாலும் மனது மூளையின் ஒரு பகுதியே!



நல்லையா பத்மநாதன்
— ஜேர்மனி —


படிப்பகம்

www.padippakam.com



மனதுக்கு வடிவம் உண்டா? வடிவம் கொடுக்கலாமா? என்ற கேள்விகள் பலகாலமாக உளவியலாளர் மத்தியில் இருந்து வந்தது.

எனக்குத் தெரிந்தவரையில் உளவியலாளர் அருகில் உள்ள படத்திலே அதில் காட்டப்பட்டுள்ள வடிவத்தையே மனதுக்குக் கொடுத்துள்ளார்கள்.





வேதாந்த சம்பாஷணையில் கடல் ஆழத்தை அறிந்தாலும் மன ஆழத்தை அறிய முடியாது என்பதைக் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

அதாவது எங்கள் மனம், புறமனம் எனவும் அகமனம் எனவும் இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புறமனம் என்பது நாங்கள் தினசரி சாதாரண உரையாடல்கள் சாதாரண சம்பவங்கள் என்பன பதிகின்ற இடமாகும். இது மனதின் சிறு பகுதியே. புறமனதில் பதியும் விடயங்கள் சிறிது நேரத்தில் மறக்கப் படுகின்றன. சிறு பகுதி மாத்திரமே ஞாபகத்தில் இருக்கும்.

ஆனால்... அதிர்ச்சியான சம்பவங்கள், மிகமிக மகிழ்ச்சியான நிகழ்வுகள், மறக்கமுடியாத அனுபவங்கள், காதல், பெற்றோர் உற்றோர் இழப்பு, மற்றோரின் அவலம் போன்றவை ஆழ்மனத்தில் நிரந்தரமாகவே பதிந்து விடுகின்றன.

இவற்றில் பல புறமனத்திற்குத் தெரியாமலிருக்கும்.

மனதை நீரில் மிதக்கும் பனிக்கட்டிக்கு உதாரணமாகக் கூறமுடியும். வெளியில் தெரியும் சிறிய பகுதி புறமனத்திற்கு உதாரணமாகவும், உள்ளே இருக்கும் பெரும்பகுதி ஆழ்மனத்திற்கு உதாரணமாகவும் கூறலாம்.




எமது மனதில் பதியும் விடயங்கள் ஞாபகத்தில் இருக்கும் கால எல்லைக்கும் ஞாபகசக்திக்கும் எதிராக உள்ள வரைபை அருகில் காணலாம்.

படிப்பகம்

www.padippakam.com

 ஒரு விடயத்தை நாம் கேள்விப்பட்டு அடுத்தநாள் அதன் அரைப்பகுதி மேல் மனதை விட்டு மறைந்துவிடும். மறுநாள் கால்பகுதியே மேல்மனதில் நிற்கும். ஆகவே அடுத்த கிழமைத்திரானுடன் நேரத்திற்குள் மீண்டும் மீண்டும் மீட்டல்கள் செய்தால் அது ஆழ்மனதில் சென்று தொடர்ச்சியாகப் பதிந்து விடுகின்றது.

தீர்க்கப்படும் பிரச்சினைகள் ஆழ்மனதில் பதிந்து இருந்தால் அவற்றால் மனிதருக்கு எவ்வித பாதிப்பும் இல்லை. **சந்தோஷமான சம்பவங்கள்** ஆழ்மனதில் பதிந்து இருந்தாலும் எவ்வித பாதிப்பும் இல்லை. அது எமக்கு உற்சாகத்தையே கொடுக்கும்.

சில தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஆழ்மனதில் பதிந்து இருந்தால் அவற்றினால் பல நோய்கள் ஏற்படுகின்றன. இப்படியான நோய்களை மனத்தால் ஏற்படும் நோய்கள் அல்லது மனத்தாக்கத்தால் ஏற்படும் உடல் நோய்கள் என்று அழைக்கப்படும். (Phychosomatic illness). இந்த நோய்கள் சிறுவயதில் இருந்து அவர்களது இளமைப்பருவம் வரை பலரைத் தாக்குகின்றன.

மனதில் ஒரே விதமான பிரச்சினை பதிந்து இருந்தாலும் உடல் வெவ்வேறு விதமாக வெளிப்பாட்டை ஏற்படுத்தும்.

உதாரணமாக:- இருபிள்ளைகளுக்கு பெற்றோர்கள் பேய் என்று கூறிப் பயமுறுத்துகின்றனர். இது அவர்களது ஆழ்மனதைத் தாக்கி விடுகின்றது. இதனால் இருபிள்ளைகளுமே நோய்வாய்ப்படுகின்றனர். ஒருபிள்ளை இரவு நேரத்தில் பயந்து கூச்சலிட்டு மயங்கி விழுகின்றது. மற்றப்பிள்ளைக்கு காக்காய் வலிப்பு (epilepsy) போன்ற வலி ஏற்பட்டு மயக்கம் ஏற்படுகின்றது.

படிப்பகம்

www.padippakam.com



மயக்கம் தெளிந்தபின் அவர்களுக்கு நடந்த சம்பவம் தெரியாமல் இருக்கும். இதிலிருந்து அவர்களுக்குச் சாதாரண புறமனதைவிட ஆழ்மனத்திலேயே அச்சம்பவங்கள் பதிந்து புதைந்து உள்ளன என்று தெரியவரலாம். இப்படியான பல உதாரணங்களை பல சம்பவங்களை உங்கள் வாழ்க்கையில் நீங்கள் அறிந்தும் உணர்ந்தும் இருப்பீர்கள்.

மனநோய்களைப் பொருத்தவரையில்

அவற்றிற்கு பாலியல் குறைபாடுகள் இல்லை. (உடற்பாதிப்பால் ஏற்படும் குறைபாடு விதிவிலக்கு). இதில் மனிதனைப் பொருத்தவரை பெரும்பாலானோர் பாலியல் குறைபாடு உடையோராகத் தம்மைப் பகர்கின்றார்கள். இவற்றிற்குக் காரணம் மனத்திரையில் பதிந்த பிழையான பாலியல் பற்றிய கருத்துக்களும் எண்ணங்களுமே. இவற்றைத் தீர்க்க முடியும்.

இன்னும் ஆஸ்த்மா, அல்சர்,

இரத்த அழுத்தம் போன்ற நோய்களையும் நகம் கடித்தல், படுக்கையில் சிறுநீர் கழித்தல் கைசூப்புதல், நித்திரையில் கதைத்தல் போன்ற ஆழ்மனப் பாதிப்பால் ஏற்படும் நோய்களையும் பழக்க வழக்கங்களையும் மிகச் சுலபமாகத் தீர்க்க முடியும்.

மனித மனம் மிக விசித்திரமானது.

எப்போது எதைச் செய்யும் என்று முன்கூட்டியே குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. அத்தகைய மனதில் ஏற்படும் பாதிப்புகள் மனித வாழ்க்கையை திசைதிருப்ப வல்லன. அந்தப் பாதிப்பு எதுவித வேறுபாடுமின்றி வாழ்க்கையுடன் விளையாடக் கூடியது. அப்படிப் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வதற்குச் சரியான வழிகாட்ட இப்பொழுது இலகுவாக முடியும்.

படிப்பகம்

www.padippakam.com



# அந்த நாள் ஞாபகம்

• மு. திருமால்மகன்.

வெள்ளிக் கிழமை என்றாலே
வெளுத்து வைத்த வெள்ளை ஆடையுடன்
வெளிக்கிட்டு விடுவேன்.
யாழ் நகர் முனியப்பர் கோவிலுக்கு
முனியப்பர் கோயில் சென்று முதற்கண் வணங்கி
- விட்டு

முற்றத்தில் நிற்கும் அணங்குகள் பக்கம் பார்வையும்
- திரும்பிவிடும்
அண்ணன் தம்பி அருகில் நின்றால் அசடும் வழியும்,
அப்பன் அருளால் அரங்கேறியவர் அநேகம்.
அவர் தம் வேண்டுதலே நிறைவேற்ற இன்று
போகலாமோ? முனியப்பர் சந்திக்கு.
மூழ்கியிருக்கும் துரையப்பா விளையாட்டரங்கு
எத்தனை, எத்தனை விளையாட்டு வீரர்களை எம்முன்
- நிறுத்தியது.

தெல்லிப்பளை மகாஜனா, யூனியன்
கொக்குவில் இந்து ; யாழ் இந்து
இப்படி இந்துக் கல்லூரிகள் பல,
மோதின உதைபந்தாட்டத்தில் அன்று.
இன்றும் பல இந்துக்கள் மோதுகின்றன
எதற்கோ? வெற்றிக் காகவா? ----?
அந்த நாள் மோதல் ஒரு வெற்றிக் கிண்ணத்திற்காக
இந்த நாளின் மோதல் ------?

www.padippakam.com



# தமிழுடன் சிறு விளையாட்டு!

!! எல்.ஜெசிந்தா !!

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 கு | கி | ■ | 2 தே | ஐ | ■ | 3 ரா | கு | ■ | 4 வே |
| ட | ■ | 5 க | னி | ■ | 6 பா | தை | ■ | 7 நா | லி |
| ■ | 8 ஆ | வி | ■ | 9 தா | ய் | ■ | 10 மி | ன் | ■ |
| 11 ம | ஞ் | ■ | 12 சு | தி | ■ | 13 4 | னை | ■ | 14 தீ |
| ண் | ■ | 15 ஜா | ரி | ■ | 16 ஆ | சி | ■ | 17 தி | னை |
| ■ | 18 டா | டு | ■ | 19 கா | ரு | ■ | 20 த் | ரு | ■ |
| 21 ஒ | ண் | ■ | 22 சா | வி | ■ | 23 வி | தி | ■ | 24 தே |
| ரி | ■ | 25 அ | ளம் | ■ | 26 இ | ரை | ■ | 27 ஜோ | ன் |
| ■ | 28 பா | சை | ■ | 29 நா | டு | ■ | 30 ஓ | டை | ■ |
| 31 கோ | வை | ■ | 32 ரா | சி | ■ | 33 உ | சை | ■ | ■ |

## இடமிருந்து வலம்

1. நோர்வேயின் பிரதமர்? ×
2. நீண்ட சுவர் உடைய நாடு.
3. சாத்திர நம்பிக்கையுடையோர் இதனிடம் சற்றுப் பயம்.
5. பழம்.
6. இது தொடரும் .... இருவர் பயணம் தொடருமோ?
7. பெண்ணுக்கு வேலியா?
8. நீர் ... கொதிப்படைந்தால் இதனைக் காணலாம்.
9. இவன் இல்லாமல் நானில்லை!

## மேலிருந்து கீழ்.

1. இதன் மேலும் இதனைக் கைத்தவர் பலர்.
2. வெள்ளையர் கோப்பியால் கெடுத்தது.
3. காதலுக்குப் பெயர் உவமானம்.
4. யாழ்ப்பாண வீரருக்கு இதுவும் இருக்கும்.
5. பாடகன்.
6. இதில் படுத்தால் .......
அவதிக்குள் .... எப்படியா?
7. ... உண்டென வேறு உன்னை வாழ்த்துப்பவர் பலர்.
8. ஆரம்பம்.
9. இதில் உருதி வெள்ளம் பட்ட பார்த்திருக்கிறாரா? அதில் அகாலிதர் இருந்த வேடம்.

www.padippakam.com



## இடமிருந்து வலம்

?0. மிகவும் சக்தி வாய்ந்தது. மனிதரிடம் பட்டால்.. அழகிடும்!

1. சந்திரன்.

2. பல அரசுகள் கவிழ மூலகாரணம்.

3. நெருப்பில்லாமல் வராது என்பது பழமொழி.

15. சாகாது.

16. புதுவசந்தத்தில் பெரியோரிடம் நீதிகளைப் பெறுவது நல்லது.

17. கப்பம்

18. பிறிதொருவீட்டுக்கு மருமகள்.

19. பாரதியாருக்கு இது தேவைப்பட்டது. பராசக்தியிடம் கேட்டிருந்தாரே?

20. குறள்.

21. எதற்கும் இந்தக் கேள்வி அவசியம் என்பர் அறிஞர்.

22. திறப்பு.

23. இப்படியொன்று இருக்காது என்பது சிலரின் வாதம்.

25. நீரிலும் நிலத்திலும் வாழும் உயிரினம்.

26. இதில் மெய்காணோர் குறைவு.

27. அரசன்.

28. மொழி.

29. நல்லறத்தில் செல்லும் பாதை.

30. கால் வாய்.

31. தமிழ் தொட்டி.

32. பலன்.

33. நீட்ட இது உதவும்!

## மேலிருந்து கீழ்.

10. அதிகம்.

11. கண் இவந்தால் இது இலக்கோ?

12. நான் சொல்வதை ஒப்புக் கொண்டால்.. இப்படிச் சொல்வீர்கள்.

13. சாப்பிடு.

14. இங்கு செல்வோர்.. வாழுவர்!

15. நாணயத்தின் தோல்.

16. பேய்களை இதன் மூலம் மரத்தில் கட்டுவர் என்பது பழங்கதை.

17. செல்வம்.

18. இலங்கையிலும் நோர்வேயிலும் காணப்படும் மிருகங்களிலொன்று.

19. சுவாமி விவேகானந்தர் இந்த ஆடையை அணிந்தாரே.

20. வணங்கு.

21. குன்றம்.

22. ஒரு தானியம்.

23. வேகம்.

24. ஆயுள் வேத மருத்துவத்தில் முக்கிய பங்கு வகிப்பது.

25. இது அருமை நாள்பட்டதோ.

26. ஒளியின் வேகத்துக்கு பௌதிகவியல் காட்டும் உதாரணம்.

27. பருவ காலம்.

28. பெண்ணைச் சிலர் இப்படியும் சொல்வது வழக்கம்.

29. மூக்கு.

30. சத்தம்.

படிப்பகம்

# நவீன ஆத்திசூடி

— சின்னத்துரை நேசரத்தினம்.

அடைவு வைத்தும் அந்நிய நாடுசெல்
ஆண்டவன் ஒருவனை மனதில் நினை.
இன்னல்கள் வரும் அதனை எதிர்.
ஈழம் வேணும் என்பதை நினை
உழைப்பு என்று ஒன்றைச் செய்.
ஊருக்குள் ஒரு உத்தமனாய் இரு.
எண்ணம் பெருத்தால் ஆபத்து வரும்.
ஏழை மனிதனை கண்போல் நினை
ஐந்து தங்கை அவர்களை கவனி
ஒழுங்காய் இருந்து ஒரு கரை சேர்
ஓம் வாழ்வில் உயரப்பார்
ஔவை சொன்னதை மனதில் வை

---

ஒரு முறை திரு 'எக்ஸ்' அவருடைய நண்பருக்குப் போன் செய்தார். போனை எடுத்த நண்பரின் மனைவி "வெயிட் பிளீஸ்!" என்று கூற "பே கில்லோ" என்று கூறி ∴ போனை வைத்துவிட்டாராம்.

- தி. ரமணன்

www.padippakam.com



# பி.எச்.டி. பட்டத்தை விட முப்பதாயிரம் நாற்பதாயிரம் பயன் மிகுந்தது

*டாக்டர் மு. வரதராசனார் தமது நண்பர் டாக்டர் ஈ. ச. விசுவநாதனுக்கு எழுதிய கடிதங்களிலிருந்து சில பகுதிகள்*

●● கடவுள் நல்லவரிடமும் தீயவரிடமும் உள்ளார். 'குற்றம் குணம் யாவும் நீ' என்பது பெரியோர் கண்ட உண்மை. ஆதலின் கடவுள் வழிபாட்டின்போது, 'பசுவிடமும் புலியிடமும் மானிடமும் ஓநாயிடமும் கடவுள் உள்ளது போலவே, காந்தியடிகளிடமும், வினோபாவிடமும் அவரிடமும் கடவுள் உள்ளார்,' என நம்பி, அவருடைய உருவத்திலும் கடவுளை உணர்ந்து வழிபாடு செய்க. கடவுளே தருமனாகவும் துரியனாகவும் காந்தியாகவும் கோட்சேயாகவும் வடிவெடுக்கிறார் என்பதை நம்பு. மனோன்மணிய சுந்தரம் பிள்ளையே சுந்தர முனிவராகவும் குடிலனாகவும் நூலில் அமையவில்லையா?

●● காந்தியடிகளின் உடல், பூட்ஸ் காலின் உதை பட்டது. முகம் பட்டது. பல் பட்டது. பல துன்பங்கள் பட்ட உடல் அது. இறுதியாகத் துப்பாக்கிக் குண்டும் பட்டது. அந்த உடல்போல், 'என் உடம்பிலும் பிறருடைய அடி உதை எல்லாம் தாங்கும் வலிமை வேண்டும். அருள்க' என்று நாள்தோறும் பிரார்த்தனை செய்க.

●● அறம் வெல்லும், வெல்லாவிட்டாலும் சாயாது, மடியாது, பொறுமை, பூண்க, குடும்ப நலத்திற்காக பீஷ்மர், விதுரர், தருமர் முதலான சில மாந்தரைப் பற்றிய கற்பனைகளை உன்னுக. மனம் தெளியும்.

●● தமிழும் பட்டமும் காக்காவிட்டால், நாநயமும் உழைப்பும் காப்பாற்றும்; ஏதேனும் ஒரு தொழிலில் ஈடுபட்டுப் பிழைக்க முடியும். ஆனால் சில ஆயிரம் சேர்த்துக் கொண்டு வருதல் நல்லது.

●● மனிதர் பெரும்பாலோர் குறையுடையவரே; பதவி உயர உயரக் குறை பெரிதாகும். இது நாற்பது ஆண்டுகளாக யான் கண்டு வருவது. பண்பாடு உடையவர் ஒரு சிலரே.

www.padippakam.com





டாக்டர் மு. வ.

●● உடல் முதன்மையானது; அதற்கும் அடிப்படையானது மனம். மனத்தைக் கெடுத்துக் கொள்ளும் திக்கில் நகர வேண்டா.

●● காலத்தைப் புலமையை வளர்ப்பதில் பயன்படுத்தினால் நல்லது. புலமையை மெல்ல மெல்லப் பிறர் போற்றி மதிக்கும் காலம்வரும் வரையில் பொறுமை மேற்கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் இருந்தேன். நான் கண்ட பயனுள்ள வழியைத்தான் பிறர்க்குக் கூற முடியும்.

●● மீண்டும் ஒரு கருத்து: உண்மையான மானம் நம் அறிவு திறமை பண்புகளால் நம்மோடு ஒட்டியிருப்பது; பிறரால் கெடுக்கவோ ஆக்கவோ இயலாதது.

●● எனக்கு ஒரு நெறி—சமய வழி உண்டு. அதன்படியே யானும் சிந்திக்க முடியும்; பிறர்க்கு வழிகாட்ட முடியும்; காந்தி —திரு.வி.க. நெறி அது. அது கோழை நெறி எனப் பலரால் பழிக்கப்படுதலும் உண்டு. காந்தி நெறி, ஜின்னா நெறி, அயூப் நெறி, நேரு நெறி... பல நெறிகளில் ஏதேனும் ஒன்றில் உள்ளத்தைப் பண்படுத்தி உறுதியாக நட. சொல்வார் சொல்லெல்லாம் கேட்டு நெறிகளை மாற்றிக் கொள்வதால் தீங்கு உண்டு.

●● மனத்தைப் பொத்தல் குடிசையாக வைத்திராமல், எந்தப் புயலையும் தாங்கும் இரும்புக் கோட்டையாக வைத்திருக்கக் கற்க வேண்டும்.

●● இவ்வுலக வாழ்விற்கு இன்றியமையாத பொருள் சேர்த்துக் கொண்டு திரும்பு; அதை முதலாகக் கொண்டு வாழலாம் என்று எழுதினேன். Ph. D. பட்டத்தை விட முப்பது நாற்பதாயிரம் பயன் மிகுந்தது.

●● குழந்தைகளின் மகிழ்ச்சியே எனக்குப் பெரிய விருந்தாக இருந்தது. உமாவின் டுவிஸ்ட் நடனமும், குந்தவையின் கரவற்ற சிரிப்பும் நினைந்து மகிழ்கிறேன்.

●● பொருள் சேர்த்து வைக்க; மலேசியாவை விட்டுத் திரும்பும் நாளில் மன நிறைவு பெறும் வகையில் பொருள் உதவ வேண்டும்.

●● கூடியவரையில் சிக்கனம் மேற்கொள்க. பணம் தங்கும் இடம் பொறுப்புள்ளதாக அமைக. எதிர்காலத்தை எண்ணி, அச்சேமிப்பே எதிர்கால வாழ்வின் மூலதனம் என எண்ணிச் செய்க.

●● தமிழகத்தில் வறுமை ஒழிந்தபாடில்லை. பிற பற்றாக்குறைத் தொல்லைகளும் பெருகி வருகின்றன. மக்களாட்சி வலிவற்றதாக ஆகிவருகிறது. அங்கு வளம் உள்ளது. சிக்கனமாக இருந்து பணம் சேர்த்து கொண்டு வருதலே எதிர்காலத்திற்காக மேற்கொள்ளத்தக்க கடமை என்பதை மறத்தல் கூடாது.

தொகுப்பு:
ம. கணேசமூர்த்தி.

www.padippakam.com



— அடுப்புப் புகைந்து கொண்டிருந்தது. அந்தத்தாயின் மனம் நிலையின்றித் தவிக்க, அடுப்பில் இருந்த தேநீர்ப் பானையும் நீண்டநேரம் கொதிக்கவா விடவா என்ற நிலையில் இருந்தது. உள்ளே சிறு பெண் தேர்ந்தவர் நால்வரும் பசியால் அனுங்கி கிடக்கின்றனர். காரச்சாரதியான அவள் நிறை நான்கு பெண்களின் வாடிய முகங்களையும் வெளிவாயிலையும் மாறி மாறிப் பார்த்தவண்ணம் நிலைகொள்ளாது தவிக்கின்றாள்.

அவளுக்கு அளவற்ற செல்வம் இல்லையென்றாலும் அமைதியாக வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது. நிறை காரைக் கொண்டு நாளாந்தம் தானே ஏதோ உழைத்து ஓரளவு நிம்மதியாக வாழ்ந்தாள்.

# புறநானூற்றுப் பெண்ணல்ல....



ஜெரின்மேரி ஜோர்ச் அவர்கள்

மக்கட் செல்வத்திற்குக் குறைவில்லை. மூத்தவன் கண்ணன் 'ஏலெவல்' படித்துக் கொண்டிருந்தான். கடைக்குட்டி பாலு செல்வம்பிள்ளை. இளைய நான்கு பெண்கள். வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி அவர்களைக் காசுக் காசாகச் சேமித்தாலும் மூத்த ஆண்மகன் படித்து முன்னுக்கு வந்து அவர்களில் இளையவளாவது கரைசேர்க்க உதவுவான் என நம்பிக்கையோடு நம்பிக்கொண்டிருந்தாள் அவளும் அவள் கணவர் கண்ணையாவும்.

ஆனால் அந்த நம்பிக்கையில் மண் விழுந்ததுபோல் தொடர்ந்து யாழ்ப்பாணப் பகுதியில் நடைபெற்றுவந்த வன்செயல்கள் அவர்களைக் கதிகலங்க வைத்தன.

வடமராட்சிப் பகுதியில் அமைந்திருந்தது அவளின் வீடு. அங்கு ஒபரேசனாக வடமராட்சியைத் தொடர்ந்து தாக்கிவந்த ராணுவ அட்டகாசம் தாளமுடியாது.

படிப்பகம்

www.padippakam.com


தரைப்படை, கடற்படை, ஆகாயப்படை ஆகிய முப்படைகளாலும் அங்கு கொல்லப்பட்டோர், அங்கவீனமடைந்தோர் அனேகர். மக்கள் வெளியில் நடமாட முடியாத தாக்குதல், ஷெல்வீச்சுகள், துப்பாக்கிச் சூடுகள். மக்களில் பெரும்பாலோரின் வீட்டில் ஒருவேளைச் சமையல்தான். கடைகளுக்குச் சென்று பொருட்கள் வாங்கவும் முடியாது. முழுப்பட்டினியாக இருப்போரும் உண்டு.

அவனின் தேவைகள் திண்டாட்டமாகப் பட்டினி! ஊர் விட முடியாது. காசிருந்தாலும் கடைகளுக்குச் செல்ல முடியாது.

"இஞ்சாருங்கோ.. பிள்ளைகளின் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஏதாவது ஒரு வழி செய்யுங்கோ. பெட்டிக்குள் கிடந்த அரிசியும் முடிஞ்சுது. அடுத்த வீட்டிலும் கடன் இல்லை."—இது கண்மணியின் கலங்கிய கண்களோடு சொல்லிய வார்த்தைகள். அடுத்த வீட்டில் மட்டுமல்ல, அந்த ஊரில் எக்கால் வாழ்ப்போர் ஷெல் அடிக்கும் 'போம்'க்கும் பயந்து வேற இடங்களுக்குப் பாதுகாப்புத் தேடிப் புறப்பட்டார்கள். அங்கே போய் விழுந்தால் இங்கேயும் இங்கே விழுந்தால் அங்கேயும் ஓடுவதும் பறப்பதும் தொடர்கதையாக மக்களின் வழக்கமாகிவிட்டிருந்தது.



www.padippakam.com



தந்தை செல் பார்த்துத் தாய் அழுவதையும்,
சிறிய சகோதரங்கள் பேச்சு மூச்சின்றி நிற்பதையும்
தானைத் தானே கண்ணனுக்கு மனம் கலங்கியது.

"அப்பா! தேத்தண்ணியைக் கெதியா வைச்சுக் குடுங்கோ. எப்பவும் உனக்கு லேட்டாகுதாம்." என்ற கண்ணன் கேட்டபின் கண்ணம்மா தேநீரைப் பனங் கட்டியோடு கொண்டு வந்து வைத்தாள். எப்படியோ அன்று இரவு பயத்துடனும் பட்டினியுடனும் போகின்றது. மறுநாள் அவனுக்கு நல்ல காய்ச்சல். முனகிக்கொண்டே படுத்திருக்கின்றான். வாசலில் மணி ஓசை கேட்கின்றது. கண்ணனே எழுந்து வாசு "கண்ணா! பேக்கரியால் இன்று பாண் போகின்றேன். போய் வாறன்". சொல்லிவிட்டு மிக விரைவாகச் சென்று விடுகின்றான் அவன்.

தாயிடம் காசை வாங்கியபடி வாசலில் ஏறுகின்றான் கண்ணன். "நல்ல காலம் ஐயா. கெதியாக ஓடிவா ராசா" என்றபடி மகனை வழியனுப்புகின்றாள் அம்மா.

அந்தந்த இடங்கள் சென்றிருக்கும். "டோர்" "டமார்" என ஒரு சத்தம் - பெரிய வெடி ஒன்றித் தட்டுவதைப் போல். பின்னர் தான் தெரிந்தது, வீடுகளின் கதவுகளை தூரத்தே யாரோ உடைக்கின்றார்கள் என்று. மெல்லத் தலையை நீட்டிப் பார்க்கின்றேன். தூரத்தில் வரிசையாக ராணுவ ட்ரக் வண்டிகள். அவற்றிலிருந்து நாலைந்து கனைத்தான ராணுவக் காடையர்கள் இறங்கி வீடுகளை உடைத்து அனைத்தும் புரிவது தெரிகின்றது.

ஓடி வந்து கதவை மூடுகின்றேன். கதவுடன் சாத்தியதற்கு கூட பேச்சு வரவில்லை. உள்ளம் பயத்தால் படபடக்கிறது. சத்தமில்லாமல் மெல்ல மெல்ல உணர்த்துகின்றேன் கணவருக்கு. அதைப் புரிந்து கொண்டு" கண்ணன் எங்கே என்கிறார் கேட்டும்"

www.padippakam.com



"ஐயோ" என வாய்விட்டே கதறுகின்றாள். 'நடந்ததைக் கூறி நான் என்ன செய்வேன்' என்று செப்புவதற்குள் பளீரென அவள் கன்னத்தில் அறைகின்றான் அவன்.

"இந்தப் பயங்கரமான நேரத்தில் பிள்ளையைப் பால் வாங்க அனுப்பிவிட்டு நீ வீட்டில் என்ன செய்கிறாய்?" எனக் கூறிக் கொண்டே விறுவிறு என வெளிவாசல் நோக்கி நடக்கின்றான்.

"ஐயோ. போகாதையுங்கோ. பிள்ளை எப்படியாவது வேறு வழியால் வந்துவிடுவான்" என அவனை வழிமறிக்கின்றாள் அவள்.

"சீ.. போ" என அவளை உதறிவிட்டு தெருவில் நடக்கின்றான் அவன். அதுதான் அவனது கடைசிநடை என்பதை அவர்கள் அவ்வேளை அறியவில்லை.

காலை ஆறுமணி என்பதைக் கடிகாரம் காட்டியது. அதுபோல் எத்தனை ஆறுமணிகள் வந்து போயின என்று கண்ணம்மா அறியாள். இதில் கைபிடித்த கணவனும், கடைக்கு வந்த கண்மணியும் கனநாட்களாகியும் வரவில்லை என்று அவளுக்குத் தெரியும். அவர்கள் இருவரும் சென்ற அன்றைய இரவு இராணுவத்தினர் வீட்டுக்கு வந்து "பொடியன்" இருக்கா எனக் கேட்டதுங்கோ, வீடு முழுவதும் புரட்டியெடுத்துப் பொருட்களைச் சிதறித் தேடியதுங்கோ அவள் என்ன சொன்னாள் என்ன செய்தாள் என்பதே நினைவில்லை.

உனக்குப் பெரிய மகனிருக்கா எனக் கேட்டதற்கு அவளால் பதில் சொல்லவே முடியவில்லை. காரணம்.... சொன்னால் எப்படியும் தேடி ஒளிந்திருந்தாலும் பிடித்துவிடுவார்களே என்ற பயம்!

www.padippakam.com


வாரம் ஒன்று சென்று மறைந்தது. ராணுவம் தன் பாவமான கடமையை செய்து முகாம்களுக்குச் சென்றுவிட்டது. சனங்களும் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வரத் தொடங்கினர்.

“பேக்கரியின் பின்புறம் உள்ள இடங்களில் ஏழெட்டுப் பிரேதங்கள் அழுகிய நிலையில் உள்ளதாகவும்; அவற்றில் அநேகம் பெண்களினுடையதும், பாண் வாங்கப் போன இளங் குமரியோடே பேக்கரியில் வேலை செய்த சிலரது சடலங்களும் அடையாளம் காணப்பட்டதாகச் சனங்கள் கதைக்கின்றார்கள்!”

இவ்வாறு அவளின் சொந்தக்காரர் ஒருவர் கண்ணீர்விட்டுக் கூக்குரலிட்டு அழுதபடி கூறுகின்றார்.

“ஐயோ”.. என அலறியபடி ஓலமிட்டு ஓடுகின்றாள் கண்மணி!

அவளது நெஞ்சுக்குள்ளே இந்த உலகமே அதிர்ந்தொழிந்து பிரளயம் ஏற்பட்டது போன்ற பிரமை.

இனி அவளின் குழந்தைகளின் கதி?

கணவனையும் மகனையும் இழந்த அவள் எதிர்காலம் என்ன?

மகனின் உடலத்தைப் பார்த்து நெஞ்சில் குண்டுபட்டு இறந்தாலும் எனது வீரமகன் என்று பார்ப்பதற்கு அவள் புறநானூற்றுப் பெண் அல்ல....

....அடுத்தவேளைச் சோற்றுக்காக அலைந்துதிரிந்து காரோட்டிக் காசு சேர்த்த சாதாரண காரோட்டியின் மனைவி....

www.padippakam.com



# "சுதந்திர ஈழம்" முடியுமா?

இலங்கை ஒரு குட்டித்தீவு. அதை இரண்டாக உடைத்து தமிழர்களுக்கு தனி "சுதந்திர ஈழம்" கொடுக்க வேண்டும் என்று தமிழர்கள் கேட்கிறார்கள். இதை எதிர்ப்பவர்கள், "சுண்டு சட்டிக்குள் குதிரை ஓட்ட முடியுமா? சுதந்திர ஈழம் தனித்து வாழ முடியுமா?" என்று கேட்கிறார்கள்.

தமிழர் கேட்கும் சுதந்திர ஈழத்தின் பரப்பளவு, 8,500 சதுர மைல். மொத்த மக்கள் தொகை, 20 இலட்சத்து 87 ஆயிரம்.

உலக நாடுகள் (ஐ. நா.) சபையில் உறுப்பினராக இருக்கும் 43 சுதந்திர நாடுகள் சுதந்திர ஈழத்தைவிட சிறியவை! அவை தனித்து இயங்குகின்றன. அந்த சின்னஞ்சிறு நாடுகள்—

| நாடு | மக்கள் தொகை | பரப்பளவு (ச. மைல்) |
|---|---|---|
| 1. ஆண்டிகுவா-பர்புடா | 81,500 | 171 |
| 2. பகாமாஸ் | 2,35,000 | 5353 |
| 3. பக்ரைன் | 4,16,275 | 265 |
| 4. பார்படோஸ் | 2,53,055 | 166 |
| 5. பெலிஸ் | 1,71,000 | 22,963 |
| 6. பூட்டான் | 10,30,000 | 18,000 |
| 7. போட்ஸ்வானா | 10,13,000 | 2,22,000 |
| 8. புருனி | 2,21,900 | 2,226 |
| 9. கேப்வெர்டே | 3,50,000 | 1,557 |
| 10. காமரோஸ் | 4,22,000 | 1,557 |
| 11. சைப்ரசு | 6,73,100 | 3,572 |
| 12. ஜிபோதி | 4,70,000 | 8,960 |
| 13. டொமினிகா | 94,191 | 290 |
| 14. ஈக்வெடோரியல் கினியா | 3,84,000 | 10,831 |
| 15. பிஜி | 7,14,000 | 7,078 |
| 16. கர்பன் | 10,22000 | 10,4557 |
| 17. காம்பியா | 6,98,817 | 4,180 |
| 18. கிரனடா | 88,000 | 133 |
| 19. கினியா பிசாவ் | 9,35,000 | 13,948 |
| 20. குயானா | 8,12,000 | 83,000 |
| 21. ஐஸ்லாந்து | 2,24,009 | 39,758 |
| 22. குவைத் | 10,77,000 | 6,880 |
| 23. லெசத்தோ | 10,63,000 | 11,720 |
| 24. லெக்சம்பர்க் | 3,69,500 | 998 |
| 25. மாலத் தீவு | 189,000 | 115 |
| 26. மால்டா | 20,00,100 | 95 |
| 27. மவுரிடானியா | 10,00,400 | 39,8000 |
| 28. மொரிசியசு | 10,97,000 | 797 |
| 29. மங்கோலியா | 1,02,000 | 6,05,022 |
| 30. ஓமான் | 3,43,334 | 1,05,000 |
| 31. கொத்தார் | 3,71,863 | 4,468 |
| 32. தூயகிறிஸ்டோபர்-நெவிஸ் | 47,000 | 104 |
| 33. தூயலூசியா | 1,43,600 | 238 |
| 34. தூயவின்சென்டு-கிரனாடின்சு | 1,38,000 | 150 |
| 35. சாவோதோம்-பிரின்சிபே | 1,13,000 | 387 |
| 36. சீசெல்சு | 67,000 | 175 |
| 37. சாலமன் தீவுகள் | 2,70,000 | 10,640 |
| 38. சூரிநாம் | 3,70,000 | 6,3992 |
| 39. சுவாசிலாந்து | 6,76,049 | 6,705 |
| 40. டிரினாட்-டுபாக்கோ | 10,24,000 | 19,978 |
| 41. ஐக்கிய அரபு எமிரேட்டுகள் | 10,77,000 | 32,300 |
| 42. வனுவாடு | 1,41,400 | 5,700 |
| 43. மேற்கு சமோவா | 1,63,300 | 1,093 |

தொகுப்பு:
கி. ஜெயதேவன்.

www.padippakam.com



நாகரீகம் என்ற போர்வையால் நன்னடத்தை புரிகின்ற மனித வர்க்கத்தின் கண் அதுவேயன்றி நான்கு புறத்திலும் விசாலமாக நிழல் பரப்பி எல்லோருக்கும் இன்ப நிழலைத் தருகின்றது இசை என்றால் அது மிகையாகாது.

இசையன்றி இவ்வுலகில் ஒரு அணுகூட அசையாது என்றவிடத்து இசைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதில் அமைதி காண்கின்றனர் மனிதர்.

இசை என்பதே இன்பம் என்று சொல்லும் அளவிற்கு இசை வளர்ந்துள்ளது.

துள்ளாத மனமும் துள்ளுவது இசையால்.


சொல்லாத கதைகள் சொல்வதும் இசையால்.

துன்பக் கடலைத் தாண்டும் போது தோணி ஆவதும் இசை. அன்புக்குரலில் அதைக் கலந்தே அணைத்துத் தருவதும்; எங்கோ இருக்கும் எண்ணங்களையும் இழுத்து வருவதும், இசைந்து மகிழ்வதும்; துயர் இடர் மறைப்பதும் இசைதான்.

வரலாற்றின் ஆரம்பகட்டத்தில் இருந்து அதாவது சிந்துவெளி நாகரீக காலகட்டத்தில் புதைபொருள் ஆராய்ச்சியில் கூட இசையையே மதித்துள்ளார்கள், என்பதற்கு பல சான்றுகள் உள்ளன. அது இன்றும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வரப்பிரசாதமாக திகழ்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

அறிவியல் எழுதப்பட்ட கவிதைகள் கூட இசைக்கே முக்கியத்துவம் கொடுத்திருந்தன. அதற்கு ஆதாரமாகப் பல கவிதைகள் இன்றும் மேன்மை உயர்வாழ்கின்றன.

## பரவசமூட்டும் இசை



திரேசா முகுந்தன்.
— பேர்கள் —

www.padippakam.com



தோகைப்பறவை கலகலவெனும் ஓசையிலும்
காற்று மரங்களிடை காட்டும் ஒலியினிலும்

என்று பாரதியார் பாடியது போல இயற்கையான சூழ்நிலையில் கூட இசையை ரசிக்கத் தெரிந்தவர்கள் என்பது வெளிப்படையாகப் புலனாகின்றது.

ஆதியில் மனிதன் தன் மொழியின் உதவியுடன் இசையையும் சேர்த்துப் பேசிப் பழகினான். பின் தன் முயற்சியால் வளர்ச்சி பெற்று பாடல்களாகப் பாட ஆரம்பித்தான்.

வாழ்க்கை வட்டத்தில் எந்த ஒரு பகுதியை எடுத்தாலும் அங்கு இசை பிரதான பங்கு வகிப்பதைக் காண முடிகின்றது.

குழந்தை பிறந்தவுடன் ரம்மியமான தாலாட்டுப் பாடல்கள் குழந்தைக்கு இதமூட்டி உறங்க வைக்கின்றன. குழந்தை வளர்ந்து பின்னர் விளையாட்டுப் பாடல்களைப் பாடி மகிழ்கின்றதுடன் தனது மழலையால் மற்றவர்களையும் மகிழ்வூட்டுகின்றது. அடுத்து கும்மிப் பாடல்கள், கோலாட்டப் பாடல்கள் என அறிவும் வளர இசையும் வளர மேம்படுகின்றது. பின்னர் கட்டிளம் பருவத்தில் காதல் பாட்டுக்களைப் பாடி இதயங்களில் காயம் ஏற்படுத்துகின்றது. இதயத்தை மீட்டும் போது நினைவுகளை அந்த இசை காந்தக் காயங்களோடு என்றும் வெளிக்கொணருகின்றது. தொழில் புரியும் இடங்களில் சோர்வைத் தவிர்க்கவும் இசைதான் உத்தாசை புரிகின்றது. பின்னர் இறுதிக்காலத்தில் மனதின் ஆதங்கத்தை வெளிப்படுத்துவதும் ஒப்பாரி என்ற இசைதான்.

இசை இன்றேல் இன்பம் இல்லாது
உலகமே வெறும் ஜடப் பொருளாகத்தான் இருக்கும். பாம்பு ஆடுவதும் பசு பால் கூட, மிகுதியாகச் சுரப்பதும் இசையின் ஆற்றல்களே!

பரவசமூட்டும் இசையை நீங்கள் அணையுங்கள்
கிளர்ச்சி உங்கள் உள்ளத்தை என்றும் தழுவும்!!


படிப்பகம்

www.padippakam.com

# சிறுவர் பகுதி.



ஒரே மாதிரியான இரு படங்கள் எவை?




படிப்பகம்

www.padippakam.com

சிறுவர் பகுதி! 42

# தாய் சொல்லைத் தட்டாதே!
(கதைப்பாட்டு)

காலைவேளை சமலம் வீட்டுக்
கோழி எட்டுக் குஞ்சுடன்
சோலையோரம் இரையைத் தேடிச்
சுற்றிச் சுற்றி வந்தது,

பஞ்சு போன்ற வண்ண வண்ணக்
குஞ்சுக் கூட்டம் தாயுடன்
கொஞ்சிக் கொஞ்சி கொத்திக் கொத்தி
கூடியோடிச் சென்றது.

பரந்த வானில் பறந்து பறந்து
பருந்து வட்டமிட்டது
அறிந்தகோழி பயந்து மக்காள்
அருகில் வாரும் என்றது.

தாயின் சொல்லை ஏழு குஞ்சும்
தலையிற் கொண்டு வந்தன
தூய வெள்ளைக் குஞ்சு ஒன்று
துடுக்குச் செய்து சென்றது.

அந்தக் குஞ்சை உணவு தேடி
அலைந்த பருந்து கண்டது
வந்து கொத்திக் கொண்டு நீல
வான வீதி சென்றது.

''கீக்கீ'' என்ற குஞ்சின் ஓலம்
கேட்டுக் கோழி நொந்தது
தூக்கிச் செல்லும் பருந்தைக் கண்டு
துடித்துக் கொண்டு நின்றது.

பெற்ற தாயின் வார்த்தை போற்றிப்
பேண வேண்டும் பிள்ளைகாள்
பற்று ஞான சீலமோங்கும்
கண்ணிய வாழ்வும் வாழலாம்.

## சிந்தனை விருந்து

1. அறிவுள்ள மனிதனோடு பொருதுப் பார்க்கலாம். பண்புள்ளவனோடு உரையாடலாம். ஆனால் அறிவற்றவனோடும், பண்பற்றவனோடும் பேசிப் பயனில்லை.

2. துன்பங்களும், துயரங்களும் நாய்களைப் போன்றவை. அவை பயந்தவர்களையும், மிரண்டவர்களையும்தான் விரட்டி, விரட்டிக் கடிக்கும்.

3. அன்பும், மரியாதையும் கொண்டு இருப்பவன் இந்த உலகத்தில் எதையும் சாதித்து விடுவான். பகைமை காட்டுபவனும் அவனிடம் பணிந்து போவான்.

4. பெரிய பதவியில் இருப்பதாலே பெரிய மனிதன் ஆகிவிட முடியாது.

## ஆச்சரியமான உண்மைகள்

• சுறா மீன்கள் சூரியன் உதிக்கின்ற சமயத்திலும் சூரியன் அஸ்தமிக்கின்ற சமயத்திலும் மட்டுமே இரை தின்னும் மற்ற சமயங்களில் ஒன்றும் தின்னாது!

• எப்போதும் வரிக்குதிரைகள் நிற்கும் போது எல்லாம் ஒரே திசையில் தான் நிற்கும். ஆனால் அவற்றில் ஒன்று மட்டும் எதிர் திசையில் திரும்பி நிற்கும். பின் பக்கத்திலிருந்து ஏதாவது ஆபத்து வந்தால் எச்சரிக்கை செய்வதற்காகவே அது அப்படி நிற்கும்!

தொகுப்பு:
கேசவநாதன்
ஹேமதாஸ்

www.padippakam.com






இரண்டு படங்களுக்கும் குறைந்த பட்சம் ஆறு வித்தியாசங்கள் உள்ளன:




ஒரு காட்டிலே ஒரு முயல் இருந்தது. அந்தக் காட்டிலே ஒரு ஆமையும் இருந்தது. ஒரு நாள் முயல் ஆமையைக் கண்டது. போட்டி போடுவோமா என்றது.

ஆமை: என்ன போட்டி?

முயல்: ஓட்டப்போட்டி!

ஆமை: சரி, சரி. எப்ப போட்டி?

முயல்: நாளைக்குப் போட்டி

முன்பும் ஒரு ஆமை இப்படி முயலை வென்ற கதை ஆமைக்கு ஞாபகம் வந்தது. எனவே முயல் துள்ளித் துள்ளி ஓடிக் களைத்த பின்பு தான் ஓடலாம் என ஆமை நினைத்தது. ஆனால் முயல் இம்முறை களைக்காமல் ஓடி வெற்றி பெற்றது. பாவம் ஆமை ஏமாந்தது.


..... இ. கலைக் இலங்கேஸ்வரன்

படிப்பகம்

www.padippakam.com


# சிறுவர் பகுதி! 44

எந்தப் பாதையால் சென்றால் கரும்பு கிடைக்கும்



அமெரிக்க உளவு நிறுவனம் CIA என்று அழைக்கப்படுகின்றது. ரஷ்ய உளவு நிறுவனம் KGB என அழைக்கப்படுகின்றது. உலக அரங்கில் இன்று உளவு நிறுவனங்களின் நடவடிக்கைகள் பரவலாகி மிகவும் பிரபலமாகி வருகின்றன.

வல்லரசுகள் மட்டுமின்றி ஏனைய நாடுகளும் தங்களின் சக்திக்கேற்ற வகையில் உளவு நிறுவனங்களை உண்டாக்கிச் செயற்பட்டு வருகின்றன. பிரிட்டன் MI-15 என்றும் MI-16 என்றும் இரு வேறு உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றது. அமெரிக்காவிலும் CIA தவிர, FBI என்கிற உளவு நிறுவனமும் உண்டு. மே.ஜேர்மனி இஸ்ரேல், பிரான்ஸ், சீனா போன்ற நாடுகளும் சக்தி வாய்ந்த உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றன.



www.padippakam.com


வளர்ந்து வரும் நாடுகளான இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகளும் உளவு நிறுவனங்களை வைத்திருக்கின்றன. இந்திய உளவு நிறுவனம் RAW என அழைக்கப்படுகின்றது.

RAW (Research and Analysis Wing) என்றழைக்கப்படும் இந்திய உளவு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள் பல்வேறு நாடுகளுக்கும் சென்று அங்கு கிடைக்கின்ற தகவல்களை சேகரித்து இந்தியாவிற்கு அனுப்பி வைக்கின்றனர். இந்திய நடவடிக்கைகள் பற்றி அன்னிய அரசுகள் என்ன நினைக்கின்றன இந்தியாவுக்கு சாதகமாகவும் பாதகமாகவும் என்னென்ன காரியங்களில் ஈடுபடுகின்றன ஆகிய தகவல்களை எல்லாம் இந்திய அரசுக்கு இவர்கள் அனுப்பி வைக்கின்றார்கள்.



## பொ - சுந்தரலிங்கம்

ரஷ்ய KGB நிறுவனம் ரஷ்ய தலைநகரான மாஸ்கோ நகரில் கருங்கற்களால் அமைந்த மிகப்பெரிய மாளிகையிலிருந்து செயல்படுகின்றது. இந்தக் கட்டிடத்தில் ஒரு இன்ஷூரன்ஸ் கம்பனி இருந்தது. KGB நிறுவனத்தில் முப்பதாயிரம் பேர் நிரந்தரமாகப் பணியாற்றுகின்றார்கள். வருடம் தோறும் நாற்பதாயிரம் மில்லியன் டாலர்களை இந்த நிறுவனம் செலவழிக்கின்றது. KGB அதிகாரிகள் பல்வேறு நாடுகளில் உள்ள ரஷ்ய தூதரகங்களில் பணிபுரிகின்றனர். அதாவது உளவாளிகள் அதிகாரிகள் என்ற போர்வையில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். கலாச்சாரத் தூதுவர்கள் விஞ்ஞான ஆலோசகர்கள், மக்கள் தொடர்பு அதிகாரிகள் என்கிற பெயர்களிலும் இவர்கள் செயல்படுவதுண்டு

www.padippakam.com

47 ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்திலும் ஐ.நா. சார்பு அமைப்புகளிலும் கூட K.G.B மனிதர்கள் உண்டு. மந்திரிமார்களாகக் கூட உலகம் முழுவதிலும் KGB உளவாளிகள் பணிபுரிகின்றனர் என்பது வியப்பான செய்தி!

வெளிநாட்டு ஆட்சிகளைக் கவிழ்ப்பதில் ரஷ்ய KGBயை விட அமெரிக்க CIA அதிக திறமையுடன் செயல்படுவதாகச் சொல்லவேண்டும். CIA 1947ல் நிறுவப்பட்டது. அமெரிக்காவின் உள்நாட்டுப் பாதுகாப்பைக் கண்காணிக்க FBI அமைப்புக்கு CIA துணை நிற்கின்றது. ஆனால் அதன் பிரதானவேலை வெளிநாடுகளில் உளவு பார்த்தல்தான்.

செயல்படுகின்ற முறையில் CIAயும் KGBயும் ஒரே தன்மை கொண்டவை என்று சொல்லி விடலாம். ஆனால் இன்றுக்கு CIA இருபதாயிரம் மில்லியன் டாலர்களைச் செலவழிப்பதாகச் சொல்லப் படுகின்றது.

விஞ்ஞானிகள் தொழில் நிபுணர்கள் மொழிவல்லுனர்கள் பொருளாதாரச் சிந்தனையாளர்கள் வரலாற்று ஆசிரியர்கள் என்று பல்துறை நிபுணர்களும் இந்த அமைப்பில் வேலைபார்க்கின்றனர்.

உலகநாடுகளில் ஆட்சிகளைக் கவிழ்ப்பதில் CIA மிகவும் திறமையுடன் செயல்படுவதாக அனைவருமே ஒப்புக் கொள்கின்றனர்.

RAW இந்து சமுத்திரப் பிராந்திய அமைதிக்காகப் பாடுபடுவதாகக் கூறி தனது எதிரிகளை அழித்தொழிப்பதில் அதிக அக்கறை காட்டி வருகின்றது. எனினும் லஞ்சம் என்ற பேயை இந்தியா பிடித்திருப்பதால் RAWவின் வளர்ச்சியிலும் பார்க்க அதனுடைய எதிரிகளாகக் கணிக்கப் படுவோரின் வளர்ச்சி மிகவும் அதிவேகமானது என்றும் கருதப்படுகின்றது.

www.padippakam.com



பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை
பாதை

குழந்தைகள் ஈர
சிமெண்ட் மாதிரி. அதன்
மேலே எது விழுகிறதோ அது
ஆழப் பதிந்து விடும்.

—ஹைம் இனாட்

தோற்று விடுவோமோ
என்ற பயத்தை
வெல்லுவதுதான்
உண்மையான வெற்றி.

—பால் ஸ்வீனி

கடலிலே நீங்கள்
எவ்வளவு புயல்களைச்
சந்தித்தீர்கள் என்பதைப்
பற்றி உலகத்துக்கு அக்கறை
யில்லை. கப்பலைக் கரைக்குக்
கொண்டு வந்து
சேர்த்தீர்களா, அதில்தான்
அக்கறை.

—எஃப்ஜி

துக்கமாக இருக்கும்
போது அதைப் பகிர்ந்து
கொள்ள எவரும் தேவை
யில்லை. ஆனால் சந்தோஷ
மாக இருக்கும்போது,
அதைப் பகிர்ந்து கொள்ள
ஒருவர் இருந்தால், அந்தச்
சந்தோஷம் இரட்டிப்பாகிறது.

—மார்க் ட்வெயின்

மற்றவர்களின்
உழைப்புக் காரணமாகத்
தான் நாம் நல்லபடி உயிர்
வாழ்கிறோம் என்பதை ஒரு
நாளைக்கு நூறு தடவை
நான் ஞாபகப்படுத்திக்
கொள்கிறேன்.

—ஐன்ஸ்டைன்

யார் ரொம்பக்
குறைவான வாக்குறுதிகள்
கொடுக்கிறாரோ, அவருக்கே
ஓட்டுப் போடுங்கள். உங்
களுக்கு ஏமாற்றமும்
குறைவாகவே இருக்கும்.

—பெர்னார்டு பரூச்

எல்லோருக்கும் உதவி
செய்து கொண்டிருப்பது
முடியாத காரியம். ஆனால்
உதவி செய்கிற மாதிரி பேசலா
மில்லையா?

—டால்ஸ்டாய்

எந்தப் பொருளையும்
மலிவாக வாங்கக் கூடிய
வருஷம்: போன வருஷம்.

—மார்ட்டின் ஆலன்

தொகுப்பு:—
என். ரமேஷ்கோர்

www.padippakam.com




கதிரவன் மலருக்கு ஏதாவது எழுதுங்கள்!
ஆனால் அரசியல் கலப்பு மட்டும் வேண்டாம் என்று பணித்திருந்தார் மலராசிரியர். ஏதோ கற்பனை விரிந்தது. அண்மையில் தமிழ்நாட்டில் நடைபெற்ற தேர்தலில் அ.தி.மு.க.(ஜெ) அணி சேவல் சின்னத்திலும் அ.தி.மு.க.(ஜா) அணி புறாச்சின்னத்திலும் மோதியது தெரிந்ததே! அப்ப.. சேவல் உசத்தியா? அல்லது புறா உசத்தியா?? உங்கள் முன் கதைப்பவர்கள் கோழி வளர்க்கும் காளியப்பனும் பந்தயப் புறா வளர்க்கும் முனுசாமியும்.

**முனுசாமி:** - சண்டைக் கோழிகளை தயார் செய்து ஒரு சேவலோடு இன்றைக்கு சேவல் போர் வைக்கிறீர்கள். ரத்தம் சொட்டச் சொட்ட ஒன்றை ஒன்று கொத்திக் கொல்கின்றது சரியா?

**காளியப்பன்:** அப்படிச் சொல்லாதீர்கள். சேவல் சண்டை என்பது பழங்காலக் கலை. இந்தியா இலங்கை உட்பட ஆசியா முழுவதிலும் இருந்தது. விளையாட்டுக்களுக்குள் பழமையது. உங்க புறாக்களுக்கு வீரம் கிடையாது. அதனால் சண்டைக்குப் போகாது.

**முனு:** சண்டை போடுவதுதான் நாகரிகமா? எங்கள் புறாவிற்கு இருக்கிற கற்பு நெறி உங்கள் சேவலிடம் கிடையாது. தன் ஜோடியோடுதான் ஆணோ பெண்ணோ பழகும். வேறு புறாவைத் தீண்டாது. புதிதாக நாம் ஜோடி சேர்க்கும் பொழுது கூட, எடுத்த உடனேயே இரண்டையும் ஒன்றாக இணைத்துக் கூண்டுக்குள் விட்டால் ஒன்றை ஒன்று கொத்திக் கொண்டு செத்துவிடும். இதனால் நடுவில் கம்பி வலையால் தடுத்து இரண்டும் ஒன்றையொன்று பார்த்துப் பழகின்ற மாதிரி செய்து பின்புதான் ஜோடி சேர்ப்போம். ஆனால் சேவல் எந்தப் பெட்டையுடன் வேணுமானாலும் சேர்ந்துவிடுமே?




**காளி:** சேவலைவிட உங்க புறாவுக்குத்தான் பொறாமை ஜாஸ்தி! தன் ஜோடிப் புறாவை வேறு புறா தொட வந்தால்க்

www.padippakam.com





கொத்தும். அவ்வளவு ஏன்? வேறு மனிதர் ஒருவர் தன் ஜோடிப் புறாவைக் கையில் தூக்குவதைப் பார்த்தால் கோபப்படும். தன் ஜோடியைக் கொத்தி துன்புறுத்தி தனது கோபத்தை வெளிப்படுத்தும். இந்தப் பொறுமைக் குணம் சேவலிடம் கிடையாது.

**முனி**: இருந்தாலும் சேவலுக்கு இல்லாத பிள்ளைப்பாசம் புறாவுக்கு உண்டு. மணிப் புறாவை வளர்த்துப் பழக்க முடியாது. வெண்புறாவைத்தான் பந்தயத்துக்கு விடலாம். பழக்கலாம். சேவலைத் திறந்து விட்டாலும் வீட்டைச் சுற்றித்தான் வரும். பொழுதுசாய்ந்துவிட்டால் உள் வந்துவிடும். ஆனால் சில புறாக்கள் வேறு எல்லையாவது பறந்து போய்விடும். வெளிப் புறாக்களோடு ஜோடி சேர்ந்து அதன் இருப்பிடத்திற்கு இழுத்து வருகிற 'ஜகோலா' புறாக்களும் உண்டே! முன்பெல்லாம் பெண் புறாக்களுடன் ஆண் புறாக்கள் ஓடிவிடும். ஆனால் இப்பொழுதெல்லாம் ஆண் புறாக்களோடுதான் பெண் புறாக்கள் ஓடிப் போகின்றன.



சேவலும் கூட சில கோழிப் பெட்டைகளைச் சுற்றிக்கொண்டு எங்கேயாவது போய்விடுமே?

**காளி** சண்டைச் சேவல் அப்படிப் போகாது! வருஷத்துக்கு ஒரு தடவை - ஒரே ஒரு தடவைதான் - சண்டைச் சேவல் பெட்டையோடு சேரப் போகும். மற்ற பதினொரு மாதமும் பிரம்மச்சார வாழ்வுதான். **முனி** ஆமாம். சில இடங்களில் சேவல் சண்டை நடத்தி சூதாட்டம் நடத்துகின்றார்களே?

**காளி**. ஆமாம். இதற்கு 'பெட்டிங்' என்று சொல்வார்கள். ஆனால் இது சட்டப்படி குற்றம். புறாப்பந்தயம் எப்படி நடக்கும்? **முனி** இரு இடங்களுக்கு இடையே பந்தயம் நடக்கிறதென்றால், போட்டியில் பங்கேற்கும் புறாக்களின் காலில் ஒரு அட்டை வீதம் கட்டப்படும்.

யோ. ஆறுமுகம்

...தில் ஏதாவது குறிப்புகள் தெரியப்படுத்தவில்லை. ஒரே நேரத்தில் ...கள் சேர்ந்திருந்து பறக்க விடப்படும். ஒவ்வொரு புறாவும் ஒரு இடத்தில் - வெகு தூரத்தில் உள்ள - அவரவர் இடங்களுக்கு எவ்வளவு நேரத்தில் வருகின்றது, எவ்வளவு தூரத்தைக் கடந்துள்ளது என்பதைக் கணக்கிட்டு வெற்றி தோல்வியை நிர்ணயம் செய்து பரிசு கொடுப்பார்கள். இதற்கு நடுவர்களும் உண்டு.

**காளி**. இதே போலத்தான் சேவல் சண்டை என்பது இருபது நிமிடம் நடக்கின்ற நிகழ்ச்சி. இருபது நிமிடத்துக்குள் ஏதாவது ஒரு சேவல் தோற்கலாம்! ஜெயிக்கலாம். இருபது நிமிடம் முடிந்தும் இரண்டுமே தோற்கவில்லை என்றால் ஆட்டம் 'ட்ரா'. புறாவை எப்படிப் பழக்குகிறீர்கள்.

**முனு**. தானாகத் தினமும் பறக்க விடணும். ஒவ்வொரு நாளும் பறக்கின்ற நேரத்தை அதிகப்படுத்தணும். திரும்பவும் கூட்டுக்குள் வந்தால் தானியங்கள் கொண்டே இருக்கணும். கொஞ்ச நாளில் ரொம்ப நேரம் பறக்கக் கத்துக்கும். சண்டையின் போது உங்க சேவல் படுகாயப்பட்டு உயிருக்கு ஆபத்தான நிலைக்கு வந்துவிட்டால் போட்டியை நிறுத்திவிடுவீர்களா?

**காளி** நாங்களாக நிறுத்த மாட்டோம். சேவலாக நிறுத்தினால்தான் உண்டு. வீரமரணம் அடைந்தாலும் சரி போட்டியில ஜெயிக்கணும் என்பதுதான் சேவலோட குணம்!

**முனு** கேட்கவே மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது. சேவல் சண்டையை நடத்தக்கூடாது என்று ஜீவகாருண்ய சங்கம் வற்புறுத்தி வருகின்றார்களே?

**காளி**. ஆமாம். இந்தியாவில சட்டப்படி தடைவிதிக்கல. ஆனா அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தடை உண்டு.

www.padippakam.com



# கோண்ஸ்...

## சமைப்போம் சுவைப்போம்

யோகராம் பிரைத



**அளவுகள்:**

3 dl பால்
25 g யாஸ் (yeast)
50 g மாஜரின்.
30 g சீனி.
400g மா (அவிக்காத மா).
அரைத் தேக்கரண்டி உப்பு.

**செய்முறை.**

1. முதலில் மாஜரினை உருக்க வேண்டும். (35 பாகை).
2. அதன் பின் பாலையும் மாஜரினையும் கலக்க வேண்டும்.
3. ஒரு பாத்திரத்தில் மா, சீனி, உப்பு ஆகியவற்றை போட்டுக் கலக்க வேண்டும்.
4. மாஜரின் பால் ஆகிய இரண்டையும் கலந்த கலவையில் அரைவாசியை எடுத்து யாஸை (yeast) கரைக்க வேண்டும்.
5. பின்பு மாவை எடுத்து யாஸ் கரைத்த பாலையும் விட்டு மிகுதிப் பாலையும் ஊற்றிக் குழைத்து ½ மணிநேரம் வைக்க வேண்டும்.
6. குழைத்த மாவிற்கு மேலால் சிறிதளவு மா எடுத்துத் தூவ வேண்டும்.
7. பின்பு குழைத்த மாவை இரண்டாகப் பிரித்து 2 உருண்டைகளாக்க வேண்டும். 1 உருண்டையை எடுத்து மேசையில் சிறிதளவு மா தூவிவிட்டு குழைத்த மாவை உருளையால் உருட்டி 8 முக்கோணத் துண்டுகளாக வெட்டி கோண் வடிவில் உருட்டி ஓவன் (Oven) தட்டில் வைக்க வேண்டும். (தட்டிற்கு மாஜரின் பூச வேண்டும்).
8. மற்ற மாவையும் இதே போல் செய்தல் வேண்டும்.
9. 240° யில் ஓவன் போட வேண்டும்.
10. செய்த கோண்ஸ் யாவற்றையும் தட்டோடு தூக்கி ஓவன் அடுப்புக்கு மேல் வைக்க வேண்டும். (15 நிமிடம்). கோண்ஸ் யாவற்றையும் வெள்ளைக் கருவினால் பூச வேண்டும். 15 நிமிடம் சென்றபின் கோண்ஸ் யாவற்றிற்கும் பட்டை பூசி ஓவனில் (20 நிமிடம்) வைக்க வேண்டும்.

பின்னர் பரிமாற வேண்டியதுதானே?

படிப்பகம்

www.padippakam.com




## வக்கில்கள் எங்கே?

● எஸ். சண்முகநாதன்

சுவர்க்கத்திற்கும் நரகத்திற்கும் இடையே ஒரு தடவை நடுவில் இருந்த சுவர் விழுந்து விட்டதாம். இதனால் சொர்க்கத்தில் உள்ளவன் நரகத்தில் இருக்கிறவனைப் பார்த்து "அதை நீ தான் கட்டித்தர வேண்டும்" என்றனம். அதற்கு நரகத்தில் உள்ளவன் "அது தான் முடியாது. நீ தான் கட்ட வேண்டும்" என்றனம். உடனே சொர்க்கத்தில் உள்ளவன் "அப்போ நான் கேஸ் போடுவேன்" என்று சொன்னான். "உன்னால் முடியாது" என்றான் அவன். "ஏன்?" என்றான் இவன். "எல்லா வக்கீல்களும் இங்கே - நரகத்திலே இருக்கிறார்களே? உன்னால் எப்படி முடியும்" என்று முழித்தான்.

எங்கோ படித்தவை;
எனக்குப் பிடித்தவை.



### தவளையும் வண்டும்

நொல்க் வகுப்பு ஆசிரியர் இந்து சமயத்தைப் பற்றி அழகாகச் சொல்லி ஒருமுறை வியப்பில் ஆழ்த்தினர். "அடடா. இந்து சமயத்தில் இவ்வளவு தத்துவங்கள் இருப்பது எங்களுக்குத் தெரியாது. உங்களுக்கு எப்படி தெரியும்?" என்றனம்!

"தாமரைப் பூ இருக்கின்ற குளத்தில் தவளையும் இருக்கின்றது. ஆனால் எங்கோ இருக்கிற வண்டு வந்துதான், அதில் தேன் இருக்கின்றது தெரியும்!"

"தவளைக்குத் தெரியாது" என்றார்!

படிப்பகம்

www.padippakam.com

## யார் அழகு?



ஸ்ரீதேவியும் மூதேவியும் திருமாலிடம் ஒருநாள் சென்றார்கள். யார் அழகு என்பது அவர்களது பிரச்சினை. இருவரையும் சிறிது தூரம் நடக்கும் படியும் பின்னர் திரும்பி வரும் படியும் பணித்தார் திருமால். பின்னர் அவர் மூதேவியைப் பார்த்து "நீ செல்லும் போது அழகாய் இருக்கின்றாய்" என்றும் ஸ்ரீதேவியைப் பார்த்து "நீ வரும் பொழுது அழகாய் இருக்கின்றாய்" என இருவருக்குமே தப்புச் சொல்லாத வகையில் "காம்ப்ரமைஸ் ஜட்ஜ்மெண்ட்" வழங்கினார்.

## லீகல் ரைட்

பாஞ்சாலி சபை நடுவிலே ஒரு கட்டம். அவளது ஆடையை உரியப் போகிறார்கள். "கொஞ்சம் நில்". உத்தரவிட்டாள் பாஞ்சாலி.

"என்னை எப்பொழுது பணயமாக வைத்துப் பாண்டவர் சதுரங்கம் ஆடினார்?" என்றாள்!

"முதலில் நாட்டை வைத்தான். அப்புறம் வீட்டை வைத்தான். அடுத்து தம்பிகளையும் தன்னையும் வைச்சான். இறுதியாக உன்னை வைச்சான்" என்ற மறுமொழி அவளுக்குக் கிடைத்தது.

"எனது கணவர் தோற்றபின், அவர்தான் அடிமையாகிவிட்டாரே? அதன் பின்பு என்னைப் பணயம் வைக்கவும் அவருக்கு உரிமையில்லை" என்று பதிலளித்தாள் பாஞ்சாலி!

லீகல் ரைட்!!

## தெரியாதா?

அனேக வகுப்புகளில் அனேக மாணவர்கள் கூறும் ஒரு வசனம் என்ன? என ஆசிரியர் கேட்டார்.
"எனக்குத் தெரியாது சார்" என்றான் மாணவன்.
"சரியான மறுமொழி" என்றார் ஆசிரியர்.

படிப்பகம்

# அன்று கண்டதில்லை

இன்று நடைமுறையில் உள்ள சில பழமொழிகள் அன்று கண்டதில்லை. அவை திரிபு அடைந்து வருகின்றன!

1. அறவடித்த முன்சோறு கஞ்சிப்பானைக்குள் விழும். இதுவே அறப்படித்த மூஞ்சூறு கூழ்ப்பானைக்குள் விழும் என்று மாறியது.
2. கைப்பூணுக்கு கண்ணாடி வேண்டுமோ என்பது கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமோ என்று தற்கால வழக்கில் உள்ளது. (பூண் = காப்பு).
3. மண் குதிரை நம்பி ஆற்றில் இறங்காதே என்பதில் குதிர் என்பது ஆற்றில் போடும் மேடு. இதுவே மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்காதே. (மண் குதிரை ஆற்றில் கரைந்துவிடும்).
4. நாயைக் கண்டால் கல்லைக் காணோம். கல்லைக் கண்டால் நாயைக் காணோம் என்பதன் அர்த்தம் நாய் உருவம் உள்ள கற்சிலை. அதை உருவாகப் பார்த்தால் நாயாகத் தெரியும். அதில் கல் என்றால் நாய் தெரியாது. கல்லாய்த்தான் தெரியும். நாயாய்க் கண்டால் கல்லாய்க் காணோம். கல்லாய்க் கண்டால் நாயைக் காணோம் என்பதே சரி.

# தெரியுமா

1. ஒரு வேட்டைக்காரன் மானைத் துவக்கால் சுட்டான். மானுக்கு மூன்று காயம் ஏற்பட்டது. மானின் வலது காதால் பாய்ந்த குண்டு இடது காது வழி வந்து இடது பின்னங் காலில் பட்டது. எப்படி?
2. தகப்பன் மகன் - நால்வர். மூன்று மான்களைச் சுட்டனர். அவற்றை மீதியாது எப்படிப் பங்கு போட்டனர்?
3. ஒரு எண்ணை 9 ஆல் வகுத்தால் 8 மீதி வரும். 8 ஆல் வகுத்தால் 7 மீதி வரும். இதே போல் 7க்கு 6ம், 6க்கு 5ம், 5க்கு 4ம், 4க்கு 3ம், 3க்கு 2ம் 2க்கு 1ம் மீதி வரும். விடை என்ன?
4. 50 மாட்டை 9 மரத்தில் ஒற்றைவிழக் கட்ட உங்களால் முடியுமா?

● அப்பாத்துரை இராமலிங்கம்

www.padippakam.com




# சிறப்புடன் வாழ்வோம்!

நாங்கள் வாழும் நோர்வே நாட்டினில்
எங்கள் 'கதிரவன்' நள்ளிரவிலும் தெரியும்.
செல்வங்கள் கூடியே காசியும் வடிவதில்லை — தினம்
கூடல்கள் கேட்டுத்தான் பொழுதும் சாய்வதில்லை.

உரிமைகள் கோரிட எமக்கொரு சங்கம் — இங்கு
திறமைகள் நிறைந்த மையாதல்கள் தெரியுமோ?
கடமைகள் தெரிந்தும் திறம்படச் செய்வோம்
மகிழ்வுடன் நிறைந்திட வளம்பல காண்போம்.

நாங்கள் என்றும் நம்பெயர் சொல்லிட
உணர்வுகள் கொண்டு உள்ளத்தால் உழைத்து — எத
கலைகள் யாவும் பாரோர் அறிந்திட,
பணிகள் ஆற்றி, சிறப்புடன் வாழ்வோம்.

— இரா. கருணைநிதி.



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்